


விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 32 வள்ளுவ ஆண்டு 2055
கார்த்திகை மாதம் 05 ஆம் திகதி புதன்கிழமை (20.11.2024)




● அரசின் கொள்கைப் பயணம் ● நாடாளுமன்ற செயற்பாடு

# இடைக்கால கணக்கறிக்கை தொடர்பில் நேற்றைய அமைச்சரவையில் ஆராய்வு



சுப்ரமணியம் நிஷாந்தன்

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றதுடன், இந்தக் கூட்டத்தில் அரசாங்கத்தின் உத்தேச இடைக்கால கணக்கறிக்கை தொடர்பாக ஆழமான கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அமைச்சரவை பேச்சாளராக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவை நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் புதிய அமைச்சரவை கடந்த 18ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துக்கொண்டது.

22 அமைச்சர்களை கொண்டதாக புதிய அமைச்சரவை இருப்பதுடன், புதிய அமைச்சரவையின் முதலாவது அமைச் சரவைக் கூட்டமும் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளராக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து ரையாடப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை. என்றாலும், எதிர்வரும் டிசம்பர் முதல் வாரத்தில் அரசாங்கத்தின் இடைக்கால கணக்கறிக்கையை

02 →

## எம்.பிக்களின் சம்பளம் தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் விளக்கம்



குஷானி ரோஹணதீர

கனூஷியா புஷ்பகுமார்

நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படுவது சம்பளம் அல்ல கொடுப்பனவு என இலங்கை நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

பிரதான சிங்கள ஊடகமொன்றின் நிகழ்ச்சி ஒன்றில் இணைந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சுமார் 54,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

அதற்கு மேலதிகமாக, வருகை கொடுப்பனவாக நாடாளுமன்றக் கூட்டங்கள் நடைபெறும் நாட்களில் 2,500 ரூபாவும் மற்றும் கூட்டத்தொடர் இல்லாத நாட்களில் குழுக்களில்

02 →

## சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 330 மில். டொலர் 4ம் கட்ட கடன் உதவி

சுப்ரமணியம் நிஷாந்தன்

நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் நான்காம் கட்டமாக இலங்கைக்கு 330 மில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச நாணய நிதியம் கடனாக வழங்க உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட குழு மூன்றாம் கட்ட மீளாய்வை நடத்த கடந்த 17ஆம் திகதி இலங்கைக்கு வருகைதந்தது.

இந்தக் குழு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், மத்திய வழங்கியின் ஆளுநர் பி.நந்தலால் வீரசிங்க உட்பட அரசாங்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது. இந்த கலந்துரையாடலின் பின்னர் எட்டப்பட்ட உடன்பாடு மற்றும் தமது மதிப்பாய்வுகள் குறித்து கொழும்பில் விசேட ஊடகச் சந்திப்பொன்றை நடத்தி விளக்கமளிக்க உள்ளது.

02 →



## புதிய சபாநாயகர் நிஹால் கலப்பத்தி

சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, ஆளுங்கட்சியின் பிரதம கொறடா நளிந்த ஜயதிஸ்ஸ



சுப்ரமணியம் நிஷாந்தன்

புதிய நாடாளுமன்றத்தில் சபாநாயகராக தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து தெரிவான நிஹால் கலப்பத்தி நியமிக்கப்பட உள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்தின் அமைச்சரவை கடந்த 18ஆம் திகதி சத்தியப்பிரமானம் செய்துகொண்டதுடன், நாளைய தினம் ஜனாதிபதி தமது கொள்கை பிரகடன உரையையும் நாடாளுமன்றில் நிகழ்த்த உள்ளார். ஜனாதிபதியின் கொள்கை

02 →

## இனி தேர்தல்களில் போட்டியிடேன் அரசியலில் ஒதுங்கவும் மாட்டேன்

### தேசிய மக்கள் சக்தி கறையானைப் போல் தமிழ் தேசியத்தை அழிக்கிறது என்கிறார் ஜனா

கனகராசா சரவணன்

ஆட்சி அமைத்துள்ள அரசாங்கம் அதன் ஜனாதிபதி அந்த கட்சி தமிழ் தேசியத்தையும் தமிழ்மக்களின் பிரச்சினைகளையும் கறையான் அரிப்பது போன்று உள்ளால் அழித்துக் கொண்டு செல்கின்றது. எனவே, தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டுமானால் நாங்கள் எங்களுக்குள் இருக்கும் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் தொடர்ந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் இல்லாவிட்டால் எமது மக்களின் எதிர்காலம் சூனியமாகுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் செயலாளரும் சங்கு சின்ன வேட்பாளருமான கோ.கருணாகரம் தெரிவித்தார்

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள அவரது காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (19) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலிலே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பில் போட்டியிட்ட எனக்கும் எனது குழுவினருக்கும் ஆதரவு நல்கிய தமிழ்



02 →

ரவி கருணாநாயக்கவின் வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு

## தேசியபட்டியல் விவகாரத்தில் சிக்கல்

எஸ்.டொரின்




புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள ரவி கருணாநாயக்கவின் இல்லத்துக்கு முன்பாக நேற்று முதல்(19) பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

அவரது இல்லத்தின் அருகே குழப்ப நிலை ஏற்படக்கூடும் என்ற

02 →

## தேசிய பட்டியல் சிக்கல்: சஜித், ரணில் அணிகளில் தொடரும் இழுபறி

சுப்ரமணியம் நிஷாந்தன்





ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் புதிய ஜனநாயக முன்னணிக்கு கிடைக்கப்பெற்ற தேசியப் பட்டியல் ஆசனங்கள் மூலம் நாடாளுமன்றத்துக்கு செல்வது யார் என்பது தொடர்பில் இரு கட்சிகளிலும் கடும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு 5 தேசியப் பட்டியல் ஆசனங்களும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணிக்கு 2 ஆசனங்களும் கிடைக்கப்பெற்றன.

02 →

## எம்.பிகளுக்கு சிறப்புரிமைகள் வேண்டாம்: பிரேரணை வரும்



கனூஷியா புஷ்பகுமார்

புதிய நாடாளுமன்றம் கூடியதன் பின்னர் உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை நீக்குவதற்கான தனிப்பட்ட உறுப்பினர் பிரேரணையை கொண்டு வரவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து நாடாளுமன்றிற்கு தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதான தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியை பலப்படுத்தும்

02 →




## கஜேந்திரகுமார் முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம்

மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

02 →

## அரசு முஸ்லிம்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளாதது கவலையளிக்கிறது



முகம்மட் முக்தார்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது செயற்படுவது மிகவும் கவலையைத் தருகின்றது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றுள்ள இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது,

முஸ்லிம் மக்களும் இந்நாட்டின் பிரஜைகள். அந்த வகையில் இந்த சமூகமும் ஏனைய சமூகங்களைப் போன்று கௌரவத்துடன் இந்நாட்டில் வாழ விரும்புகின்றது. இந்நாட்டின் சுதந்திர காலம் தொட்டு நியமிக்கப்பட்டு வந்த அமைச்சரவையில் முஸ்லிம்

02 →

# தெஹிவளை துப்பாக்கிச் சூடு: இரு சந்தேக நபர்கள் கைது

தெஹிவளை நெதிமால பிரதேசத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி தெஹிவளை கல்கிசை மாநகர சபை ஊழியரான அநுர கொஸ்தா என்பவர் கொலை செய்யப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஹோமாகம பனாகொட இராணுவ முகாம் அருகில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை கைது செய்தனர்.

அதன்போது, அவரது பையில் கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கி மற்றும் 6 தோட்டாக்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மற்றொரு சந்தேக நபர் அத்துருகிரிய மொரட்டுவாஹேன பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் கொலைக்காக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் பல பாகங்களாக பிரிக்கப்பட்டு பாதுக்க பிரதேசத்திலுள்ள விமானப்படை வீரர் தங்கியிருந்த வாடகை வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி......

### சர்வதேச நாணய...

சர்வதேச நாணய நிதியத்திடம் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் 2.9 பில்லியன் டொலரை கடந்த 2022ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் கோரியது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாடு எட்டப்பட்டது.

2023ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி முதல்கட்டமாக 333 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு கடனாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கப்பெற்றது. 2023ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் திகதி இரண்டாம் கட்ட கடனாக 337 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாக கிடைக்கப்பெற்றது. இவ்வாண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி மூன்றாம் கட்டமாக இலங்கைக்கு 336 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாக கிடைக்கப்பெற்றது.

தற்போது மூன்றாம் கட்டமாக வழங்கப்பட்ட கடன் தொடர்பிலான மதிப்பாய்வை மேற்கொள்ள இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட குழு, நான்காம் கட்ட கடனை விரைவாக இலங்கைக்கு வழங்கும் என தெரிவித்துள்ளது. நான்காம் கட்டமாக இலங்கைக்கு 330 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாக வழங்கப்பட உள்ளதாக நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### புதிய சபாநாயகர்...

விளக்க உரைக்கு முன்னதாக புதிய சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெறும். அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம் இடம்பெறும். சத்தியப்பிரமாணத்தின் பின்னர் நாடாளுமன்ற ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைக்காக கூடும்.

இந்த நிலையில் புதிய சபாநாயகராக நிஹால் கலப்பத்தியை தெரிவுசெய்ய தேசிய மக்கள் சக்தியின் உயர்மட்ட குழுவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது.

இதேவேளை, சபை முதல்வராக அமைச்சர் பிமல் ரத்நாயக்கவையும் ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவாக நலிந்த ஜயதிஸ்ஸவையும் ஆளுங்கட்சி நேற்று செவ்வாய்க்கிழமை நியமித்துள்ளது.

இன்று 20 ஆம் திகதி ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தை நடத்த உத்தேசித்துள்ளடன், இதன்போது இந்த விடயம் இறுதி செய்யப்பட உள்ளது.

### இனி தேர்தல்களில் போட்டி ...

தேசியத்தை நேசிக்கும் மக்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகள்.

இது எமக்கு தோல்வி அல்ல எமக்கு ஏற்பட்ட சிறு சறுக்கலே ஆகும். இந்த சறுக்கலில் இருந்து பாடம் கற்று மீள் எழுச்சி பெறுவது எங்களது நோக்கமாகும். ஒரு காலத்தில் ஆட்சி செய்த தேசிய கட்சிகளே அடுத்து தேர்தலில் தோல்வி கண்ட வரலாறுகள் இருக்கின்றது

1970ம் ஆண்டு ஆட்சி செய்த ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, 1977 ஆம் ஆண்டு வெறும் 8 ஆசனங்களுடன் நாடாளுமன்றம் சென்ற வரலாறு இருக்கின்றது. அதேபோன்று 2020 ஆம் ஆண்டு 3 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இருந்த தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) இன்று 159 ஆசனங்களை மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலாக ஆட்சி அமைத்த வரலாறும் இருக்கின்றது.

எனவே, எமக்கு இது தோல்வி அல்ல அடுத்த வெற்றிக்கான பலமான வலுவான அத்திவாரத்தை இடும் ஒரு வாய்ப்பாகத்தான் இதனை பார்க்கின்றோம். எமது இலக்கு நோக்கிய இலட்சிய பயணம் எட்டும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

தோல்வியில் துகழ்வது வரலாறு எம்போன்ற போராளிகளுக்கு எப்பவும் இருந்ததில்லை தோல்வியை வெற்றியாக்குவது தான் எங்களது இலட்சியம். அந்த இலட்சியம் தொடர்ந்து கொண்டே இருக்கும். வடக்கு,கிழக்கிலே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிட்டது. திருகோணமலைமாவட்டத்தில்தமிழ்பிரதிநிதித்துவத்தை தக்க வைப்பதற்காக இணைந்து போட்டியிட்டோம். அந்தவகையில் எங்களுக்கு கணிசமானளவு மக்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

எதிர்காலத்தில் தமிழ் மக்கள் இணைந்து செயற்படாவிட்டால் தமிழ் தேசியம் விட்டுப்போகும் என்பதை சிந்தித்து அனைவரும் செயற்படவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழ் தேசியத்துடனும் தமிழ் மக்களுடனும் தமிழ் கட்சிகளுடனும் நேரடியான மோதலிலே ஈடுபட்டனர். அதேபோன்று, அவர்களது ஆட்சி வேறு விதமாக இருந்தது.

ஆனால், தற்போது ஆட்சி அமைத்துள்ள அரசாங்கம் அதன் ஜனாதிபதி, அந்த கட்சி தமிழ் தேசியத்தையும் தமிழ்மக்களின் பிரச்சினைகளையும் கறையான் அரிப்பது போன்று உள்ளால் அழித்துக் கொண்டு செல்கின்றது. எனவே எங்களது மக்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டுமானால், நாங்கள் எங்களுக்குள் இருக்கும் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் தொடர்ந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இல்லாவிட்டால் எமது மக்களின் எதிர்காலம் சூனியமாகும் என்பதில் எந்த மாற்று கருத்தும் இல்லை.

ஜனாதிபதி தேர்தலில் சங்கு சின்னம் வடக்கில் மாத்திரம் அல்ல கிழக்கிலும் கணிசமான வாக்குகளை பெற்றது. குறிப்பாக மட்டக்களப்பில் 37 ஆயிரம் வாக்குகள் சங்கு சின்னத்துக்கு கிடைக்க பெற்றது. இந்த தேர்தலில் 14 ஆயித்துக்கு மேற்பட்ட வாக்குளை பெற்றிருக்கின்றது. இதற்கு பல காரணங்கள் உண்டு. சங்கு சின்னத்தில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட பா.அரியேந்திரன் சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டாம் என தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். அப்படிப்பட்ட பல காரணங்களால் சங்கு சின்னத்துக்கு கிடைக்க வேண்டிய ஆதரவு கணிசமானளவு குறைந்துள்ளது

மாற்றம் முழுநாட்டிலும் ஏற்பட்டுள்ளது. 3 ஆசனங்களுடன் இருந்த தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களை பெற்றதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 51 ஆயிரம் வாக்குளை பெற்றுள்ளதுடன் வடக்கு கிழக்கில் 12 ஆசனங்களை பெற்றுள்ளது .

அதேவேளை, எதிர்வரும் தேர்தலில்களில் நான் போட்டியிடமாட்டேன். கடந்த தேர்தலில் கூட நான் நடந்து முடிந்த இந்த தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று தெரிவித்தேன். இருந்தபோதும்,தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் இருந்து தமிழரசு கட்சி வெளியேறியதன் காரணமாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி கட்சிகளின் அழுத்தம் மற்றும் மட்டக்களப்பில் தலைமை தாங்கி செயற்பட வேண்டிய காரணமாக நான் இந்த தேர்தலில் போட்டியிட்டிருந்தேன்.

இனிவரும் காலங்களில் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடமாட்டேன். அதேவேளை அரசியலில் இருந்து ஒதுங்கவும் மாட்டேன். தமிழ் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு எப்போதும் தயாராக இருப்பேன்.

அந்தவகையில், கூட்டணியின் தேசிய அமைப்பாளர் என்ற வகையில் அனைத்து வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு நன்றிகள். அதேவேளை, மீண்டும் எம்மை ஆதரித்தோர் விமர்சித்தோர் எள்ளிநகையாடியோர் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகள் என்றார்.

### தேசியப் பட்டியல் சிக்கல்...

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட பல சிரேஷ்ட உறுப்பினர்கள் தோல்வியுற்றுள்ளனர். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் போட்டியிட்ட சில பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கிய உறுப்பினர்களும் தோல்வியுற்றுள்ளனர். தோல்வியுற்றுள்ள பலரும் தேசியப் பட்டியல் ஆசனத்தை கோருவதால் குறித்த 5 தேசியப் பட்டியலுக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் பாரிய சிக்கல்கள் எழுந்துள்ளன.

இதனால் தேசியப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீல்.எல்.பீரிஸ், முன்னாள் எம்.பிகளான சுஜீவ சேனசிங்க, டளஸ் அழகப்பெரும, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே உள்ளிட்ட முக்கியமான உறுப்பினர்களுக்கு தேசிய பட்டியல் நியமனத்தை வழங்குவதிலும் அக்கட்சிக்குள் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, புதிய ஜனநாயக முன்னணிக்கு கிடைக்கப்பெற்ற 2 தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமிப்பதிலும் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன.

இக்கூட்டணிக்கு கிடைக்கப்பெற்ற 2 தேசியப் பட்டியலில் ஒரு ஆசனத்தை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்கு வழங்க கட்சியில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் அவருக்கு குறித்த ஆசனத்தை ஒதுக்குமாறும் புதிய ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளரால் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்று அனுப்பட்டது. இந்தக் கடிதத்தின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழு ரவி கருணாநாயக்கவின் பெயரை வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

என்றாலும், கட்சிக்குள் எவ்வித கலந்துரையாடல்களையும் நடத்தாது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியும் குறித்த கூட்டணியின் தலைவராகவும் செயல்படும் ரணில் விக்ரமசிங்க குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

இதுதொடர்பில் கலந்துரையாடல்களை நடத்த கூட்டணியின் தலைவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஒன்று கூடினர். ரவி கருணாநாயக்கவின் செயல்பாடு தொடர்பில் இந்தச் சந்திப்பில் கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், இறுதி முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

மாறாக காஞ்சன விஜேசேகர மற்றும் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோரை தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கைகள் இதன்போது முன்வைக்கப்பட்டுள்ளன. என்றாலும், இன்னமும் இறுதி முடிவுகள் இதனை புதிய ஜனநாயக முன்னணி எடுக்கவில்லை எனத் தெரியவருகிறது.

### தேசியபட்டியல் விவகாரத்தில்...

தகவலின் அடிப்படையில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி 03 மாவட்ட ஆசனங்களைக் கைப்பற்றியதுடன் பெற்ற மொத்த வாக்குகளின்படி இரண்டு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் கைப்பற்றியது.

புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க, தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ரவி கருணாநாயக்கவின் பெயரை பரிந்துரைத்தார்.

இதுதொடர்பில்அவர்தேர்தல்கள்ஆணைக்குழுவிற்கு அறிவித்ததுடன், அதன் பிரகாரம் புதிய ஜனநாயக முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினராக ரவி கருணாநாயக்கவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று (18) வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், புதிய ஜனநாயக முன்னணியின் ஒன்றிணைந்த கட்சிகளின் அனுமதியின்றி கட்சியின் செயலாளர் அவரை தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பரிந்துரைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ரவி கருணாநாயக்கவின் நியமனம் வழமையானதல்ல என அந்த முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் தெரிவித்துள்ளன.

மேலும், ரவி கருணாநாயக்கவின் பெயர் நாடாளுமன்றத்தின் தேசியப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டமை தொடர்பில் பல தரப்பினரும் ஆட்சேபனைகளை முன்வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த அசாத் சாலி, உள்ளிட்ட பலர் ரவி கருணாநாயக்கவின் இல்லத்தை முற்றுகையிட்டு இந்த முடிவை திரும்பப் பெற முயற்சி எடுக்க வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக சில குழப்பங்கள் ஏற்படும் என ஊகிக்கப்படுவதாக கருதி ரவி கருணாநாயக்கவின் இல்லத்திற்கு முன்பாக பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எம்.பிகளுக்கு சிறப்புரிமைகள்...

நோக்கில் இந்த புதிய கலாசாரம் கொண்டுவரப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், "எங்களுக்கும் சில சலுகைகள் பிடிக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் காலை, மதிய உணவை நிறுத்துங்கள். தேவைப்பட்டால் வீட்டில் இருந்து கொண்டு வருவோம்.

குறைந்த வட்டியின் கீழ் வழங்கப்படும் 10 மில்லியன் கடனை முற்றிலுமாக நிறுத்தவும். அனைத்து எம்.பி.க்கள் மற்றும் அமைச்சரவை, அமைச்சர்களின் பாதுகாப்பை நிறுத்தவும். அமைச்சர்களுக்கு கொழும்பில் வாசஸ்தளம் வழங்கப்பட்டால் வாடகை அடிப்படையில் வழங்கவும். அந்த பணத்தை மஹாபொல நிதிக்கு வழங்கவும். அலுவலகம் ஒன்றிற்காக வழங்கப்படும் ஒரு இலட்ச ரூபாய் தொகை தேவையில்லை.

நாடாளுமன்ற உறுப்பினரின் அடிப்படைச் சம்பளம் 54,285 ரூபாய். அதுவும் வேண்டாம் என்றால் இதை கௌரவமான சேவையாகச் செய்யுங்கள். வாகன கொடுப்பனவு உட்பட அனைத்தையும் நிறுத்துங்கள்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதி வசதியாக மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர் இல்லங்கள் வழங்கப்பட வேண்டும். 10 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையை நிறுத்துங்கள்.

ஓய்வூதியத்தை இரத்து செய்யவும். எம்.பி.க்களின் பிரபுத்துவத்தை ஒழிக்க வேண்டும்.

இதை 21ஆம் திகதிக்கு முன்னரே ஆரம்பிக்கவும், ஏனென்றால் 21ஆம் திகதி வீட்டிற்கான விண்ணப்பம் கொடுத்த பிறகு இதை செய்ய முடியாது. அதனால் தற்போதே ஆரம்பிக்கவும்." என வலியுறுத்தியுள்ளார்.

### கஜேந்திரகுமார்...

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட கஜேந்திரகுமார் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்குச் சென்ற கஜேந்திரகுமார் அங்கு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதன்போது நினைவுத் தூபியில் பொதுச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி சத்தியப்பிரமாணம் செய்து தனது கடமைகளை அவர் ஆரம்பித்தார்.

இந்த நிகழ்வில் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அரசு முஸ்லிம்களின்...

மக்களின் பிரதிநிதித்துவம் இருந்து வந்துள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக இந்த அரசாங்கம் நியமித்த அமைச்சரவையில் முஸ்லிம் சமுகத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனால் நாடு முழுவதும் உள்ள முஸ்லிம் சமுகம் மிகுந்த கவலை கொண்டுள்ளது. சமுக வலைத்தளங்களை அவதானிக்கின்ற போது இதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த அரசாங்கத்தின் கடந்த குறுகிய கால செயற்பாடுகள் சிலவற்றை பார்க்கும் போது முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கின்றதோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் அந்த மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட 06 தவிசாளர் பதவிகளில் எந்தவொருமுஸ்லிம்தவிசாளரும்நியமிக்கப்படவில்லை. இந்த விடயம் பேசு பொருளான பின்னர் ஒரு முஸ்லிம் தவிசாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல இந்த அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற 18 தேசியப்பட்டியல் ஆசனங்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் முன்னர் வெளியிடப்பட்ட போது எந்தவொரு முஸ்லிம் உறுப்பினரதும் பெயர் வெளிவரவில்லை. பின்னர் இதுவும் பேசுபொருளான பின்னர் ஒரு முஸ்லிம் உறுப்பினரது பெயரோடு புதிய பட்டியல் வெளியானது.

அந்த வரிசையிலேயே இப்போது இந்த அரசாங்கம் நியமித்துள்ள அமைச்சரவையில் இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான இனத்துவேசத்தை விதைத்து ஆட்சிக்கு வந்த கோத்தாபாய ராஜபக்ஸ அரசாங்கத்தின் அமைச்சரவையில் கூட முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த உதாரணங்களை வைத்து நோக்கும் போது இந்த அரசாங்கத்திற்கு முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இருப்பது போலவே எனக்குத் தோன்றுகின்றது. இப்படியிருந்தால் இந்த ஆரம்பத்திலேயே இது களையப்பட வேண்டும். இந்த அரசாங்கத்தோடு இணைந்திருக்கின்ற முஸ்லிம்கள் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் அளிக்கப்பட்டுள்ள சுமார் 15 இலட்சம் முஸ்லிம் வாக்குகளுள் சுமார் 10 இலட்சம் முஸ்லிம் வாக்குகள் திசைகாட்டிக்கு அளிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் அளிக்கப்பட்டுள்ள வாக்கு விபரங்களை அணுகி ஆராய்கின்ற போது இந்த உண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

முஸ்லிம்களின் இந்தளவு பெரிய எண்ணிக்கை வாக்குகளைக் கொடுத்து உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் புரிந்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெவித்தார்

### எம்பிக்களின் சம்பளம்

கலந்துகொள்வதற்கு 2,500 ரூபாவும் உதவித்தொகையாக வழங்கப்படும்.

தூரத்தை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் நிலையில் அது சூத்திரத்தின்படி கணக்கிடப்படும்.

அதுமட்டுமல்லாமல், நாடாளுமன்றத்தில் இருந்து 40 கிலோமீட்டருக்குள் வீடு இல்லாதவர்கள் விண்ணப்பித்து மாதிவெலயில் அமைந்துள்ள எம்பி குடியிருப்புக்களை பெற்றுக் கொள்ளலாம்.

மாதிவெலயில் இவ்வாறான 108 வீடுகள் உள்ளன. ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியினரின் வேண்டுகோளுக்கு இணங்க முதலில் கோரிக்கைகள் முன்வைக்கப்படும் வரிசையில் வீடுகள் வழங்கப்படும்.

வீட்டு வாடகையாக 2,000 ரூபாய் செலுத்தப்படும். மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணத்தை தொடர்புபட்ட உறுப்பினர் செலுத்த வேண்டும்." என கூறினார்.

மேலும், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் மருத்துவ வசதிகளை பெற்று கொடுப்பதன் மூலம் கொடுப்பனவுகளில் இருந்து தொகையை குறைக்க நாடாளுமன்றம் மற்றும் நாடாளுமன்ற அலுவல்களைகள் அமைச்சு இணைந்து வசதிகளை வழங்கியுள்ளதாக தெரிவித்த செயலாளர் நாயகம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட ஊழியர்களுக்கு தேவையான கொடுப்பனவுகளையும் குறித்த அமைச்சு ஏற்கும் எனவும் வெளிப்படுத்தினார்.

### இடைக்கால கணக்கறிக்கை

சமர்ப்பிப்பது தொடர்பில் ஆழமான கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. இந்த இடைக்கால கணக்கறிக்கை ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கானது என்பதுடன், 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை மார்ச் முதல்வாரத்தில் சமர்ப்பிக்கவும் அரசாங்கம் உத்தேசித்தள்ளது.

இடைக்கால கணக்கு அறிக்கையானது முழுமையாக அரச செலவினங்களுக்கானதாக இருக்கும் என்பதுடன், 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மக்களுக்கான சலுகைகளை வழங்குவது குறித்தும் அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற செயல்பாடுகளை கொண்டுசெல்லும் விதம் தொடர்பாகவும் அரசாங்கத்தின் எதிர்கால செயல்பாடுகள் குறித்தும் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

# 108 எம்.பிக்கள்: உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிக்கும் கடைசி நாள் இன்று



(எஸ்.டொரின்)

உத்தியோகபூர்வ இல்லங்களை இன்றைய தினம் (20) கையளிக் குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு அறிவிக்கப்பட் டுள்ளது.

108 நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டிருந்ததாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். இதுவரை 30 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது உத்தியோகபூர்வ இல்லங்களை கையளித்துள்ளனர். 108 உத்தியோகபூர்வ இல்லங்களில் 70 இல்லங்களின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். விமானப் படையுடன் இணைந்து இராணுவம் மற்றும் கடற்படையினரும் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

10ஆவது நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதிக்கு பின்னர் முன்னெடுக்கப்படும் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். சட்டரீதியாக நாளை (21) முதல் அதற்கான இயலுமை காணப்படுகின்ற போதிலும், தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள புனரமைப்பு பணிகள் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

# தமிழர்களின் பேராதரவைப் பெற்ற மாயாஜால வித்தைக்காரர் அநுர

(சுப்ரமணியம் நிஷாந்தன்)



"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆதரவை முழுமையாகப் பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மாயாஜால வித்தைக்காரர் என்றே குறிப்பிட வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்களின் ஆதரவைப் பெற்று ஜனாதிபதி வரலாற்றில் இடம் பிடித்துள்ளதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்."

– இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இலங்கை தேர்தல் வரலாற்றில் தனித்த அரசியல் கட்சி ஒன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனித்து வெற்றி பெற்றுள்ளமை இதுவே முதல் தடவையாகும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் ஆதரவை முழுமையாக வென்று வரலாற்றில் இடம் பிடித்துள்ளதை வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தலைக் காட்டிலும் நாடாளுமன்றத் தேர்தலில் அதிகளவான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார். நான் மாயாஜால வித்தைக்காரரல்ல என்று ஜனாதிபதி குறிப்பிட்டமை முற்றிலும் பொய்யானது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆதரவைப் பெற்றுள்ள ஜனாதிபதி உண்மையில் மாயாஜால வித்தைக்காரர் என்றே குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஒட்டுமொத்த மக்களின் ஆதரவையும் பெற்று ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளமைக்கு நன்றியும், அரசுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# உண்மையான நல்லிணக்கம் ஏற்பட அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியம்

## தேசிய மக்கள் சக்திக்கான வாழ்த்துச் செய்தியில் சுரேஷ் வலியுறுத்து



"எந்தவொரு அரசுக்கும் கொடுக்காத ஆதரவை வரலாற்றில் முதல் தடவையாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்குக் கொடுத்துள்ளனர். அதுமாத்திரமல்லாமல் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் வழங்கியுள்ளனர். இந்நிலையில், நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முதன்மைப்படுத்தக்கூடிய ஒன்றாக தேசிய இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதானது இனங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக் கத்தையும் பரஸ்பர நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் என்று நாங்கள் நம்புகின்றோம்."

– இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்திக்கு வாழ்த்துத் தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு:– "நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வாக்களித்த 65ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கும் வாக்களிப்பில் கலந்துகொண்ட கலந்துகொள்ளாத ஏனைய மக்களுக்கும் எமது நன்றிகள்.

வரலாற்றில் முதன்முறையாக விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குமேல் கொடுத்து ஓர் இடதுசாரி கட்சியை ஆட்சியில் அமர்த்திய மக்களுக்கு எமது வாழ்த்துகள். ஆட்சியில் அமர்ந்திருக்கக்கூடிய தேசிய மக்கள் சக்திக்குப் பெருமளவிலான சுமை தலைமேல் சுமத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்க வேண்டும். வெளிநாடுகளில் வாங்கிய கடன்களை அடைக்கத் தொடங்க வேண்டும். உள்நாட்டில் அவர்களை நம்பி வாக்களித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கென பிரத்தியேக பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். இவ்வாறு பல பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றன. இதற்கு மேலதிகமாக சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருளாதாரக் கொள்கை, வெளியுறவுக் கொள்கை போன்றவையும் நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியமானவை.

புதிய அரசும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து அனைத்து கடமைகளையும் செய்து முடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய அரசு முந்தைய ஆட்சியாளர்கள் வெற்றிக்களிப்பில் திளைத்ததுபோல் அல்லாமல் தனது கடமைகளையும் பொறுப்பையும் உணர்ந்து சரியான திசைவழியில் பயணிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக ஓர் அதிகாரப் பகிர்வுக்காகப் போராடி வந்திருக்கின்றனர். அதற்காக நீண்டகாலப் போர் ஒன்றும் இந்த மண்ணில் நடைபெற்றது. எந்தவொரு அரசுக்கும் கொடுக்காத ஆதரவை வரலாற்றில் முதல் தடவையாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்குக் கொடுத்துள்ளனர். அதுமாத்திரமல்லாமல் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் வழங்கியுள்ளனர். இந்நிலையில் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முதன்மைப்படுத்தக்கூடிய ஒன்றாக தேசிய இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதானது இனங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கத்தையும் பரஸ்பர நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் என்று நாங்கள் நம்புகின்றோம்." – என்றுள்ளது

# பிரதி அமைச்சர்கள் நாளை நியமனம்: எண்ணிக்கை மட்டுப்படுத்தல்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

புதிய அரசாங்கத்தின் பிரதி அமைச்சர்கள் நாளை வியாழக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட உள்ளனர்.

25 முதல் 28 பேருக்குள் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 159 உறுப்பினர்களை பெற்றுக்கொண்டது. பாரிய வெற்றியை தேசிய மக்கள் சக்தி பெற்றிருந்த போதிலும் அமைச்சரவையானது 22 பேருக்குள் மட்டுப்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் மேலும் ஓர், இருவர் அமைச்சர்களாக நியமிக்கப்பட கூடும் எனவும் அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், பிரதி அமைச்சர்கள் நியமனம் நாளை இடம்பெற உள்ளது. நாளைய தினம் காலை 10 மணிக்கு நாடாளுமன்ற அமர்வு இடம்பெற உள்ளது. நாடாளுமன்ற அமர்வை தொடர்ந்து பிற்பகல் பிரதி அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்துக்கொள்ள உள்ளனர். இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

புதிய அரசாங்கத்தினால் எந்தவொரு இராஜாங்க அமைச்சரும் நியமிக்கப்பட மாட்டார். அடுத்த ஓரிரு தினங்களில் 25 முதல் 28 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள்.


# 10 மில்லியன் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருட்டு

## இளைஞன் கைது

அநுராதபுர பிரதேசத்தில் வீடொன்றை உடைத்து 10 மில்லியன் ரூபாய் பெறுமதியான பொருட்களைத் திருடியதாக கூறப்படும் 24 வயதான இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அநுராதபுரம் புபுதுபுர பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.



# அக்கரைப்பற்று நகரில் பட்டப்பகலில் கொள்ளை

(வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று 9 ஆம் பிரிவில் பட்டப்பகலில் வீடொன்றில் நுழைந்த திருடன் நகை மற்றும் பணத்தை திருடிச் சென்றுள்ளதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். இச்சம்பவம் திங்கட்கிழமை (18) ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன் அவ்வீட்டின் அலுமாரியில் இருந்த 3 தங்க மோதிரம் 25000 ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் ஆகியன திருடப்பட்டுள்ளதாக அவர் கூறினார். சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிசாரிடம் முறைப்பாட்டை பதிவு செய்துள்ள நிலையில் பொலிசார் மோப்ப நாயின் உதவியுடன் திருடனை பிடிப்பதற்கான விசாரணையினை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவ தினம் (18) வீட்டின் உரிமையாளரின் கணவர் வேலைக்கு சென்ற நிலையில் அவ்வீட்டில் வசித்து வந்த வீட்டு உரிமையாளரின் தாய் தந்தையும் திருகோணமலைக்கு சென்றுள்ளனர். இந்நிலையில் நண்பகல் 12 மணியளவில் தனியாக இருந்த அப்பெண் அயலில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றுள்ளார்.

சுமார் ஒரு மணி தாண்டியதன் பிற்பாடு வீட்டு உரிமையாளரின் தங்கை அவசரமாக அவரை அழைத்து அருகில் இருந்த வீட்டில் இருந்து ஒருவன் மதில் மேலால் பாய்ந்து செல்வதாக அறிவித்துள்ளார். உடன் வருகை அந்த அவர் வீட்டை திறந்து பார்க்கையில் வீட்டின் கூரை வழியாக உள்நுழைந்த திருடன் அறையின் பூட்டை உடைத்து உள்ளிருந்த மோதிரம் மற்றும் பணம் உண்டியலில் இருந்த பணம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளதை அவதானித்து பொலிசாருக்கு தகவலை வழங்கியுள்ளார்.

இதேநேரம் குறித்த வீட்டில் திருடிய கள்வன் அருகில் இருந்த இன்னுமொரு வீட்டில் திருட முற்பட்டுள்ளதையும் முடியாமல் போகவே அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளதையும் அருகில் இருந்த சீசிடிவி கமாராவில் பதிவு செய்யப்பட்டுள்ள காட்சிகள் மூலம் தெரிய வருகின்றது.

அக்கரைப்பற்று பகுதியில் பல வீடுகளில் இதுபோன்ற சம்பவங்கள் தற்போது அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் எனவும் பொலிசார் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தி திருடர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# புதிய அமைச்சுக்களுக்கு செயலாளர்கள் நியமனம்

புதிய பிரதமரின் செயலாளர், அமைச்சரவையின் செயலாளர் உட்பட 18 அமைச்சுகளின் புதிய செயலாளர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க தலைமையில் நேற்று (19) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அவர்களின் பெயர் விபரம் வருமாறு,

1. பிரதமரின் செயலாளர் - பீ.பீ. சபுதந்திரி
2. அமைச்சரவையின் செயலாளர் - டபிள்யூ. எம்.டீ.ஜே.பெர்னாண்டோ
3. சிரேஷ்ட பேராசிரியர் கபில சீ.கே.பெரேரா - போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் , துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சு
4. கே.எம்.எம்.சிறிவர்தன - நிதி ,திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
5. ஜே.எம்.திலகா ஜயசுந்தர - கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு
6. ஏ.எம்.பீ.எம்.பி.அத்தபத்து - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
7. பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி - பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு
8. எச்.எஸ்.எஸ்.துய்யகொன்த - பாதுகாப்பு அமைச்சு
9. டீ.டபிள்யூ.ஆர்.டி.செனவிரத்ன - பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
10. யூ.ஜீ.ரஞ்சித் ஆரியரத்ன - நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு
11. பேராசிரியர்.கே.டீ.எம். உதயங்க ஹேமபால - வலுசக்தி அமைச்சு
12. எஸ்.ஆலோக பண்டார - பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
13. எஸ்.எம்.பியதிஸ்ஸ - தொழில் அமைச்சு
14. ஏ.விமலேந்திரராஜா - வர்த்தக,வாணிப ,உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு
15. டீ.பி.விக்ரமசிங்ககே. - விவசாயம்,கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
16. எம்.ஜீ.எஸ்.என்.களுவெவ - கல்வி,உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
17. ஏ.எச்.எம்.யூ - அருண பண்டார - இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
18. அருணி ரணராஜா - வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு

ஒருவனின் நோக்கில்...
No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# ஆசிரியர்களின் பொறுப்பு என்ன?

மாதா, பிதா, குரு அதன் பின் தான் தெய்வம். ஒருவனை உலகுக்கு அறிமுகப்படுத்துபவர்கள் அவனது பெற்றோர்களாக இருந்தாலும் இதுதான் உலகம் என்பதை காட்டுபவர்களாக ஆசிரியர்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

13 வருடங்கள் நாம் ஒரு நாளில் அதிக நேரத்தை ஆசிரியர்களுடனேயே செலவழிக்கின்றோம். ஆசிரியர்கள் பிள்ளைகளை வளப்படுத்துவதற்கும், செழிப்பாக்குவதற்கும் கடமைப்படுவதால் அவர்கள் எப்பொழுதும் இரண்டாவது பெற்றோர்களாக பார்க்கப்படுகின்றனர்.

உலகளாவிய ரீதியில் உள்ள நாடுகள் அனைத்தை விடவும் இலவசக் கல்வி இலங்கையில் சிறப்பாக காணப்படுகிறது. ஆசிரியர் ஒருவரை உருவாக்க அரசாங்கம் பொதுமக்கள் வரிப்பணத்திலிருந்து பாரிய ஒரு தொகையை செலவளிக்கவும் செய்கிறது.

ஆசிரியர்களையும், அதிபர்களையும் நம்பி பெற்றோர்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது பிள்ளையின் எதிர்காலம் மீது கொண்ட அளப்பரிய எதிர்ப்பார்ப்பினால் ஆகும்.

நல்லதொரு பிரஜையின் பின்னால் சிறந்த ஒரு ஆசான் காணப்படுவது உறுதி. பல சந்தர்ப்பங்களில் ஒருவரின் வாழ்க்கைக்கு சிறந்த வழிக்காட்டியாக இருந்த ஆசிரியர்கள் பற்றி நாம் பல கதைகளை கேள்விப்பட்டிருப்போம். பேசப்படாத கதைகளும் இல்லாமலில்லை.

எனினும், அண்மைய காலங்களாக இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் அசம்பாவிதங்கள் தொடர்பில் பல விடயங்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் வென்னப்புவ பிரதேசத்தில் 15 வயதுடைய மாணவியொருவரை ஆசிரியர்கள் இருவர் தாக்கியதால் உயிரிழந்த சம்பவம் பதிவாகியிருந்தது.

இந்த விடயத்தை பிரதான தலைப்பிட்டு கூறும் அளவிற்கு நமது சமுதாயம் வந்துவிட்டது என்பதை எண்ணி நாம் தலைகுனிய வேண்டும்.

இந்த சம்பவம் வெறுமனே ஒரு குடும்பத்திற்கு நடந்த இழப்பு மாத்திரம் அல்ல. இது ஒரு சமுதாயத்தை பிரதிபலிக்கின்றது. ஒவ்வொரு குடும்பத்தையும் இவ்விடயம் பாதிக்கின்றது.

உயிரிழந்த மாணவி என்ன தவறு செய்திருந்தாலும் கூட சிறிய ஒரு தண்டனையுடனோ அல்லது பெற்றோர்களிடம் அறிவுறித்தியோ நிறுத்தியிருக்கலாம். எனினும், இவ்வாறு தாக்கியதன் காரணமாக ஒரு குடும்பம் தனது பிள்ளையை இழந்து விட்டது.

நட்ட ஈடாக எத்தனை கோடி வழங்கினாலும் அதனை ஈடு கட்ட முடியாது. நோயால் அல்லது ஏதோ விபத்தால் ஒருவர் மரணிப்பதையே தாங்க முடியாத இந்த சமுதாயத்தில் ஒருவரின் தவறால் செயற்கையான மரணம் எய்துவதை எப்படி தாங்க முடியும்?

குறித்த இரு ஆசிரியைகளும் மாணவியை தாக்கியமைக்கான காரணம் எதுவாகவும் இருக்கட்டும், எனினும் அந்த மாணவி மூன்று மாதங்களாக சிகிச்சைகளில் பட்ட வேதனையும், கஷ்டமும் இரு ஆசிரியைகளை தண்டிப்பதால், சட்டத்தின் முன் நிறுத்துவதால் மாத்திரம் கிடைத்து விடுமா?

சட்ட ரீதியாக எடுத்துக் கொண்டால் இது ஒரு மனித உரிமை மீறல். நவீன கல்வித்திட்ட விதிகளுக்கு ஏற்ப, கையில் பிரம்புடன் கூட ஓர் ஆசிரியர் செல்ல அனுமதி கிடையாது.

மாணவர்கள், கீழ்ப்படியாமல் இருப்பார்களாக இருந்தால், அவர்களை ஒழுங்காக வழிநடத்த பல உளவியல் பயிற்சிகள் உள்ளன. அவற்றை கற்றுத்தான் ஆசிரியர் சேவைக்கு வர வேண்டும்.

அவற்றை தவிர்த்து வன்முறையை கையில் எடுப்பது சரியான ஒரு தீர்வாக ஒருபோதும் அமையாது. வன்முறையில் ஈடுபட சொந்த பெற்றோர்களுக்கு கூட உரிமை இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. இவை மாத்திரம் அல்ல. பல பிரதேசங்களில், பாடசாலைகளில் மாணவர்களை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கும் சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அதிபர்களால், ஆசிரியர்களால் பெண் மாணவர்கள் துன்புறுத்தப்படுவது, துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவது போன்ற பல சம்பவங்கள் பதிவாகின்றன. பெண் மாணவர்களுக்கு மாத்திரம் தான் இநத நிலைமையா? எனக் கேட்டால் ஆண் மாணவர்களும் கூட இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்படுகின்றனர் என கூறலாம்.

அவை தவிர, அதிபர்கள், ஆசிரியர்களிடையே காணப்படக்கூடிய பாலியல் தொடர்புகள் போன்றவை வளர்ந்து வரும் ஒரு மாணவனை தவறான ஒரு பாதையில் வழிவகுக்கின்றன.

இவ்வாறான செயல்களும், நடவடிக்கைகளும் தான் பாடசாலை இடை விலகலுக்கு ஏதுவாக அமைகிறது. போதிய வருமானம் இன்மையால் இலவசக் கல்வியை பெறும் நோக்கில் பல கனவுகளை தோளில் சுமந்து வரும் அப்பாவி மாணவர்களுக்கு இவ்வாறான நிலை ஏற்படுவதால் எதிர்காலத்தில் நல்ல பண்பாடுள்ள ஆரோக்கியமான சமுதாயம் உருவாகாது.

வளமான நாடு ஒன்றை புதிதாக தெரிவாகியுள்ள புதிய அரசாங்கம் எதிர்ப்பார்க்குமாக இருந்தால் அதற்கான அடித்தளத்திலிருந்து மாற்றத்தை ஆரம்பிக்க வேண்டும்.

வளமான நாட்டுக்கு வளமான கல்வியும், செழிப்பான பிரஜைகளும் தூண்கள் எனலாம். இலங்கையை உலகளாவிய ரீதியில் கொண்டு செல்ல கல்வி ஒன்றே உறுதுணையாக இருக்கின்றது.

எனினும், அந்த இலவசக் கல்வியை சரியாக பெற மாணவர்களுக்கு வழி விட்டால் அதுவே போதுமாக இருக்கும்.

வென்னப்புவ பாடசாலை ஒன்றில் இரு ஆசிரியர்களினால் மாணவி ஒருவர் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் இறுதியாக இருக்கட்டும். இதற்கு மேல் இது மாதிரியான வன்முறை சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க சட்ட நடவடிக்கைகள் மாத்திரமல்ல உரிய ஒழுக்கங்களும் ஆசிரியர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். இது அரசாங்கத்தின் பொறுப்பு மாத்திரமல்ல சமூகத்துக்கும் உரியது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அரசாங்கம் உள்ளிட்ட அமைச்சரவைக்கு இதில் பாரிய பங்கு உள்ளது. கல்வி அமைச்சராக பொறுப்பேற்றுள்ள கலாநிதி ஹரிணி அமரசூரிய, கல்வியில் தேர்ந்த ஒரு பெண் ஆவார். ஆகவே, கல்வியின் முக்கியத்துவமும் அதனை கற்று சிறந்த பிரஜையாக நாட்டில் திகழ்வது எந்தளவுக்கு சிறப்பாகவும் ஒழுக்கமாகவும் அமையும் என்பது அவருக்குப் புரியாததல்ல.

பாடசாலை மாணவர்களின் உரிமைகளை அவர்களுக்கு வழங்கி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க பாடுபடுவது அவசியம். இது ஒவ்வொரு பிரஜைகளினதும் பாரிய கடமையும் ஆகும்.

# மறுக்கப்படும் குழந்தைகளின் உரிமைகள்!

**து.சிந்துஜா**

மனிதனின் வாழ்க்கை வட்டத்தில் குழந்தைப் பருவம் மிகவும் இனிமையானது. எந்தவொரு சுமையும் இன்றி தன் விருப்பப்படி வாழ்வது குழந்தைப் பருவத்தில் மட்டும்தான் எனக் கூறினால் அது மிகையாகாது.

அப்படிப்பட்ட குழந்தைகளுக்கான உரிமைகள் மற்றும் அவர்களுக்கான சுதந்திரத்தை பெற்றுக் கொடுக்க வேண்டியது அனைவரினதும் கடமையும் பொறுப்பும் கூட.

இதனை மனதில்கொண்டு தான், 1925 ஆம் ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற குழந்தைகள் நலன் தொடர்பான உலக மாநாட்டின்போது சர்வதேச குழந்தைகள் தினமாக நவம்பர் 20 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

இத் தினமானது சர்வதேச ஒற்றுமை, மற்றும் குழந்தைகளிடையே விழிப்புணர்வையும் அவர்களின் நலனையும் மேம்படுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது.

1959 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபை குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட திகதி என்பதால் இதுவொரு முக்கியமான திகதியாகும்.



இத் தினத்தின் முக்கிய நோக்கம் என்னவெனில், குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்தவும், அவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள், சுரண்டல்கள், பாகுபாடு போன்ற வடிவங்களில் பல கொடுமைகளுக்கு ஆளாகும் குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் குழந்தை தொழிலாளர்களாக இருக்கும் குழந்தைகளை மீட்டெடுக்கவும் இத் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

உலக நாடுகளில் அவர்களின் பண்பாடு, பாரம்பரியம், சட்டதிட்டங்களுக்கு அமைய குழந்தைகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டாலும் அதன் நோக்கம் என்னவோ குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான்.

குழந்தைகளுக்கான அடிப் படை உரிமைகளுள் கல்வி, உணவு போன்றவற்றை முக்கியமாகக் கூறலாம்.

ஆனால், தற்போதைய சூழலில் எத்தனை குழந்தைகளுக்கு இவை அனைத்தும் சென்றடைகின்றது எனக் கேட்டால், அதற்கு யாரிடமும் பதில் இல்லை.

ஓரளவுக்கு பொருளாதார ரீதியில் நல்ல நிலையில் இருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அவர்களின் உணர்வுகள் மற்றும் உரிமைகளை இலகுவாக காத்துக்கொள்ளவும், தக்க வைத்துக்கொள்ளவும் முடிகிறது.

ஆனால், இதுவே வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அல்லது நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளின் நிலை என்னவாக காணப்படுகிறது?

வீதிகளில் எத்தனை குழந்தைகள் யாசகம் கேட்டு பெற்றோரின் அருகில் அமர்ந்திருப்பதை பார்த்திருக்கிறோம்.

அவர்களுக்கு பாடசாலை செல்லும் ஏனைய பிள்ளைகளைப் பார்க்கையில் மனதில் ஒருவித தாழ்வு மனப்பான்மையும் தன் நிலையை எண்ணி ஒரு வித சங்கடமும் ஏற்படும் அல்லவா?.

இது ஒரு புறமிருக்க பாடசாலை, வீடு என எத்தனை குழந்தைகள் உடல் மற்றும் மன ரீதியிலான துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

உலக நாடுகளில்தான் இதுபோன்ற விடயங்கள் அதிகம் என்று ஒரு காலகட்டத்தில் இருந்தது. ஆனால், தற்போது இலங்கையிலும் இதுபோன்ற சம்பவங்கள் அதிகமாக பதிவாகி வருகின்றன.

அண்மையில் கூட இரண்டு சம்பவங்கள் மனதை உலுக்கும்படி அமைந்தது.

அதாவது, ஒரு பெண் குழந்தை அவளது வீட்டாரால் கடுமையாக தாக்கப்படும் காணொளியொன்று ஊடகங்களில் பரவியது. இக் குற்றச் செயலைச் செய்த அந்நபர் சிறையில் தள்ளப்பட்டார்.

அதேபோல் பாட்டிமார் மூவரினால் சிறுவன் ஒருவன் கடுமையாக தாக்கப்படும் காணொளியொன்றும் பேசும் பொருளானது. இவ்வாறு இலங்கையில் குழந்தைகளுக்கு எதிராக அரங்கேறும் கொடுமைகள் அதிகம் என்று கூறலாம்.

அதேபோல குழந்தைகளுக்கு போஷாக்கான உணவுகள் வழங்காமல் தண்டித்தல், அவர்களின் வயதுக்கு மீறிய தண்டனைகளைக் கொடுத்தல் போன்ற கடுமையான நடவடிக்கைகளும் ஆங்காங்கே வெளிச்சத்துக்கு வராமல் நடந்துகொண்டு தான் இருக்கிறது.

அதேபோல் தான் குழந்தைகளை மன ரீதியாக துன்புறுத்தவும் அவர்களை மற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டு பேசி மனவுளைச்சலுக்கு ஆளாக்குதல், தாழ்வு மனப்பான்மைக்கு உட்படுத்துதல் போன்ற பல பிரச்சினைகள் சமூகத்தில் குழந்தைகள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அதேபோல் அவர்களுக்கான சரியான வயது வருவதற்கு முன்பே அவர்களை பாலர் பாடசாலைகளில் சேர்ப்பது போன்ற தவறுகளும் பெரும்பாலும் அவர்களை சிரமத்துக்கு உள்ளாக்குகின்றன.

குழந்தைகளின் உரிமைகள் நான்கு பரந்த பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்நான்கு பிரிவுகளும் சமூக, பொருளாதார,கலாசார, குடிமை உரிமைகளை அளிக்கக்கூடியது.

அதாவது, வாழும் உரிமை, பாதுகாக்கப்படும் உரிமை, பங்கேற்கும் உரிமை, முன்னேறும் உரிமை.

வாழும் உரிமை என்ற அடிப்படையில், கருவானது தாயின் வயிற்றில் இருக்கும்போதே ஆரம்பமாகிவிடுகிறது. அதற்கு குறைந்தபட்ச உணவு, உறைவிடம், உடை மற்றும் கௌரவமாக வாழும் உரிமை ஆகியன அவற்றுக்குள் அடங்கி விடுகின்றன.

ஆனால், நிறைய பெற்றோருக்கு இதன் அர்த்தம் விளங்காது, நம் பிள்ளைகள் தானே எப்படி அவர்களுக்கு இதுபோதும் என்ற வரையறைக்குள் அவர்களே வந்துவிடுகின்றனர்.

இன்னும் சிலர் அவர்களின் கல்வியை நிறுத்தி, வீட்டில் அமர வைத்து ஏனைய குழந்தைகளை கவனிக்க வைக்கின்றனர். அப்படி இல்லையெனில் அவர்களை கூலித் தொழிலுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

இது இலங்கையில் அண்மையில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம்.

பாதுகாக்கப்படும் உரிமை எனும்போது, குழந்தைகள் வீடு மற்றும் பிற இடங்களில் எதுவித சுரண்டல்களுக்கும் ஆளாகாமல் பாதுகாக்கப்படுவதோடு, தவறாக நடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொள்கிறார்களா என்பதை உறுதி செய்தல் ஆகும்.

பங்கேற்கும் உரிமையில், குழந்தைகள் அவர்கள் சார்ந்த விடயங்களில் வயதுக்கு ஏற்றாற்போல் முடிவுகளில் பங்கேற்றும் உரிமையை குறிப்பிடலாம்.

அதேபோல் தான் அன்பும். குழந்தைகளுக்கு தேவையான நேரங்களில் அன்பு செலுத்தப்பட வேண்டும். இல்லையெனில் அவர்கள் ஒருவித விரக்தியுடன் வாழ்க்கையில் எதுவித பிடிப்பும் இல்லாமல் வளர்ந்து விடுவார்கள்.

இது அவர்களின் எதிர்காலத்துக்கு மிகுந்த பாதகத்தை ஏற்படுத்திவிடும்.

முழு நேரமும் கல்வி கற்க வேண்டும், அவர்களுக்கு விளையாடுவதற்கான நேரம் கொடுக்கப்படாமல் இருப்பதும் ஒரு வகையில் குழந்தைகள் உரிமை மீறல் தான்.


குழந்தைகள் வளர்வதில் பெற்றோரின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமோ அதேயளவுக்கு ஆசிரியர்களின் பங்களிப்பும் அளப்பரியது.

குழந்தைகள் சரியாக கல்வி கற்கவில்லை எனும்போது அவர்களை கண்மூடித்தனமாக அடித்து துன்புறுத்தல், தண்டனைகள் வழங்கப்படுதல் போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இவற்றையெல்லாம் முடிந்தளவுக்கு தவிர்த்தல் நல்லது. குழந்தைகள் வளரும் மொட்டுக்கள் அவர்களை முடியுமானவரையில் உரிமைகளுடன் வாழ வழி வகை செய்வோம்.

> 1925 ஆம் ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற குழந்தைகள் நலன் தொடர்பான உலக மாநாட்டின்போது சர்வதேச குழந்தைகள் தினமாக நவம்பர் 20 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது





## முன்னாள் அமைச்சரால் சூறையாடல்:

# திக்கம் வடிசாலை மோசடி விசாரணை நடத்த முடிவு

### பனை அபிவிருத்தி சபையின் தலைவர் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

திக்கம் வடிசாலை கடந்த பத்து வருடங்களாக முன்னாள் அமைச்சர் ஒருவரால் சூறையாடப்பட்டுள்ளது. அங்கு பணிபுரிந்த முன்னாள் களஞ்சியசாலை காப்பாளர் துப்பாக்கி முனையில் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பனை அபிவிருத்தி சபையின் தலைவர் வி.சகாதேவன், இங்கு நடைபெற்ற அனைத்து மோசடிகளும் விசாரிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த அவர், பனை அபிவிருத்தி சபையின் கீழ் உள்ள கற்பகம் பனை உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தைப் பார்வையிட்டார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

தலைவராகப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு ஆய்வுகளை செய்து வருகின்றேன். கடந்த காலங்களில் பனை வளம் சார்ந்த விடயங்களைப் பாதுகாப்பதில் பல்வேறு குறைபாடுகள் உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலை கடந்த பத்து வருடங்களாக முன்னாள் அமைச்சர் ஒருவரால் சூறையாடப்பட்டுள்ளது. அங்கு பணிபுரிந்த முன்னாள் களஞ்சியசாலை காப்பாளர் ஒருவர் முறைப்பாடு ஒன்றை எனக்கு வழங்கியுள்ளார். தான் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டு தனது வேலையிலிருந்து விலக்கப்பட்டதாகவும், இன்று வரை நீதி கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.



முன்னாள் அமைச்சரின் அதிகாரப் பிடியில் பனை அபிவிருத்தி சபை மட்டுமல்ல வடக்கு மாகாணமும் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்த நிலையில் இந்த நியமனத்தின் மூலம் தமக்கு நடந்த அநியாயங்களை வெளிக்கொண்டு வர பலர் துணிந்திருக்கிறார்கள்.

தகவல் அறிக்கையின் பிரகாரம் கிட்டத்தட்ட 100 மில்லியன் ரூபாய் நேரடியான பணப்பரிமாற்றம் அந்த இடத்தை கைப்பற்றுவதற்காக நடந்திருப்பதாக அறியமுடிகின்றது.அதனைவிட 2014ஆம் ஆண்டு சபையின் அன்றைய முன்னாள் தலைவரின் அறிக்கையின்படி 69 மில்லியன் பெறுமதியான மதுசாரம் ஆயுத முனையில் கொள்ளையடிக்கப்பட்டாக கூறியிருக்கிறார். அங்கு நடைபெற்ற கொள்ளைகள் முறைகேடுகள் மிக அதிகமானவை. இப்போது ஒவ்வொன்றாக வெளிவருகின்றது. சாட்சியங்களை சேகரித்து வருகின்றோம். இந்த விசாரணைகளில் யாரும் தப்ப முடியாது. நெடுந்தீவில் பிரதேச செயலாளர் ஒருவரால் சட்டவிரோதமாக கள் உற்பத்தி நிலையம் நடாத்தப்பட்டு தென் இலங்கைக்கு விற்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

பனை வளத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன். பொதுமக்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அத்துடன் 11 மாவட்டங்களில் பனைவளம் உள்ளது.

பனஞ் சாராயத்தினை ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிகமான வருமானத்தைப் பெறமுடியும். அதற்கான அனுமதியை எமது சபையே வழங்கும் தனியாக எவரும் செய்யமுடியாது. ஒருசில ஊழல்வாதிகள் மற்றும் மதுவரித்திணைக்கள அதிகாரிகள் இலஞ்ச மோசடியில் ஈடுபட்டு புதியவர்கள் இந்த தொழிலுக்கு வரவிடாமல் தடுத்துள்ளனர். அவ்வாறான ஒரு விடயத்திற்காக 15 மில்லியன் பணம் வழங்கப்பட்டதற்கான ஆதாரம் கிடைத்துள்ளது. விரைவில் நடவடிக்கை எடுக்க உள்ளோம். ஏற்றுமதியில் ஈடுபடுவதற்கு பலர் விண்ணப்பித்துள்ளனர். அதற்கான கூட்டம் விரைவில் நடக்க உள்ளது என்றார்.

# இராணுவ முகாமை அகற்றி காணியை உரிமையாளரிடம் வழங்குமாறு அறிவிப்பு

பருத்தித்துறை கற்கோவளம் இராணுவ முகாமை 14 நாட்களுக்குள் அகற்றி காணியை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

மூவருக்குச் சொந்தமான 3 ஏக்கர் காணியே இவ்வாறு விடுவிக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய நேற்றுமுன்தினம்(18) மாலையிலிருந்து முகாமை அகற்றும் பணி இடம்பெற்றது.

குறித்த காணி வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கற்கோவளம் கடற்கரையுடன் அண்டிய பகுதியில் மூன்று சகோதரர்களுக்குச் சொந்தமான காணியாகும். இக் காணியை இரு தடவைகள் இராணுவ முகாமுக்காக சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செ.கஜேந்திரன் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் எம். கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் காணி உரிமையாளர்களுடன் இணைந்து போராடி அளவீட்டுப் பணியைத் தடுத்து நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யானை தாக்கி படுகாயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

யானை தாக்கியதில் படுகாயங்களுக்கு உள்ளான மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் சிவநகர் ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் மகேந்திரராஜா (வயது-61) என்பவராவர்

கடந்த 8ஆம் திகதி துவிச்சக்கர வண்டியில் அவர் வயலுக்கு சென்றபோது காலை ஆறு முப்பது மணியளவில் இத்திநாடு பகுதியில் யானை சஞ்சரிக்கும் இடத்தில் இவரை யானை தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்போது வீதியில் சென்றவர்கள் குடும்பத்தினருக்கு அறிவித்ததையடுத்து உடனடியாக ஒட்டுசுட்டான் வைத்திய சாலையில் அனுமதித்து பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர், ஞாயிற்றுக்கிழமை (17) பகல் உயிரிழந்தார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சாட்சிகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# வீரபுரம் ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு: தாக்குதல் நடத்தியதாக மூவர் கைது

கி.வசந்தன்

வவுனியா வீரபுரம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்.

கடந்த வாரம் பாடசாலையில் உயர்தர மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இதன்போது இளைஞர் ஒருவர் ஆசிரியர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, மாணவி ஒருவரிடம் பேச வேண்டும் என கோரியுள்ளார். இதற்கு ஆசிரியர் மறுப்பு தெரிவித்துள்ளார். அதனால் ஏற்பட்ட முரண்பாட்டினால் அன்றையதினம் மாலை குறித்த ஆசிரியர் தங்கியிருந்த வீட்டிற்கு சென்ற சிலர் ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் (18)வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் மாலை மூன்று இளைஞர்கள் செட்டிகுளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் தமக்கு போதிய பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களும் நேற்றையதினம் சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு முன்னரும் இரு ஆசிரியர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவங்களும் குறித்த பாடசாலையில் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மலையக மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்துவோம்

### தேசிய மக்கள் சக்தி எம்.பி- கிருஷ்ணன் கலைச்செல்வி

(க.கிஷாந்தன்)



சலுகை அரசியல், அடிமை அரசியல் என்பவற்றை நிராகரித்து கொள்கை ரீதியிலான மாற்றத்தை மலையக மக்கள் ஏற்படுத்தியுள்ளனர். எனவே, மலையக மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை நிச்சயம் நாம் ஏற்படுத்துவோம். மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை சிதைக்கும்வகையில் ஒருபோதும் செயற்படமாட்டோம்.” என தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்தார். ஹட்டனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

தேசிய மக்கள் சக்திக்கு மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் கிடைக்கப்பெற்றுள்ள வெற்றி மகிழ்ச்சியளிக்கின்றது. இது மூவின மக்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள வெற்றியாகும். இந்த வெற்றியை நாம் வரவேற்கின்றோம். மாற்றத்துக்காக வாக்களித்த அனைத்து மக்களுக்கும் என் சார்பிலும், கட்சி சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நுவரெலியா மாவட்டமானது தேர்தல் காலத்தில் பாரம்பரிய இரு கட்சிகளுக்கு வாக்களிக்கப்படும் மாவட்டமாக பயன்படுத்தப்பட்டுவந்தது. இந்த நடைமுறை இம்முறை தோல்வி கண்டுள்ளது. எனவே, இந்த வெற்றி பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியது.

சாப்பாடு கொடுத்து, சாராயம் வழங்கி வாக்குகளைப் பெறுவதற்கு சிலர் முற்பட்டனர். இவை எவற்றுக்கும் அடிபணியாமல் தம்முடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மக்கள் கொள்கை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். மாற்றுச் சிந்தனையை நோக்கி எமது மக்கள் காலடி எடுத்துவைத்துள்ளனர்.

மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை வீழ்த்தாமல் மலையக மக்கள் எதிர்பார்க்கும் வேலைத்திட்டத்தை நிச்சயம் முன்னெடுப்போம்.

உண்மை ஒரு நாள் வெல்லும் என்பதே சமூக நியதி. இத்தேர்தலில் அது நடந்துள்ளது. எமது மக்களை வாக்கு இயந்திரமாகவே இங்குள்ள அரசியல் தரகர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். இது தெரியவந்ததால்தான், சிறந்த தலைமைத்துவம் கிடைக்கப்பெற்ற பின்னர் அரசியல் தரகர்களைத் தோற்கடித்துள்ளனர். இதுதான் உண்மையான மாற்றம்.”- என்றார்.

# மன்னாரில் கேரள கஞ்சா பொதியுடன் ஒருவர் கைது

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தள்ளாடி சந்தியில் 04 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு, உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மன்னார் தள்ளாடி சந்திக்கு அருகில் வைத்து, மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு உத்தியோகத்தர்களால் கேரள கஞ்சா பொதியுடன் நேற்று முன்தினம் (18) இரவு அந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அந்நபரிடம் இருந்து 04 கிலோ 248 கிராம் எடைகொண்ட



கேரள கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் கள்ளி கட்டைகாடு பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது. விசாரணைகளின் பின் சந்தேக நபர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மன்னார் பொலிஸார் தெரிவித்னர்.

# மாத்தளை மாவட்ட அரச நிறுவனங்களின் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை

### கமகெதர திசாநாயக்க எம்.பி தெரிவிப்பு

(எம்.எஸ்.எம். மஸாஹிம்)

கடந்த காலங்களில் மாத்தளை மற்றும் தம்புள்ளை மாநகர சபைகள், மாத்தளை மாவட்ட மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் மற்றும் பதவி துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக அவசர விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாத்தளை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கமகெதர திசாநாயக்க தெரிவித்தார்.

ஊடகத்துக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் எவருக்கும் எதிரானவர்கள் அல்ல. எவரையும் பழிவாங்கும் நோக்கமும் எங்களுக்கு கிடையாது. அரச திணைக்களங்களில் உள்ளூராட்சி மன்றங்களில் உயர் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை இடம்பெற்ற ஊழல்கள் மோசடிகள், துஷ்பிரயோகங்கள் பற்றி உண்மையான விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாகவே பகிரங்க மேடைகளில் நாம் அறிவித்துவிட்டோம்.

இதனை ஏற்றுக்கொண்ட மக்கள் தேர்தலில் வாக்களித்து வெற்றிபெறச் செய்தார்கள். விழிப்புடன் இருக்கும் மக்களுக்கு எமது செயற்பாடுகளையும் நாம் கூறியவற்றையும் நிறைவேற்ற வேண்டியது எமக்குள்ள பாரிய பொறுப்பாகும்.

எனவே, ஊழல் மோசடிகள் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு மக்களுக்கு உண்மைகளை தெளிவுபடுத்துவதோடு தவறு செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். இது எவரையும் தனிப்பட்ட ரீதியில் பழி வாங்கும் நோக்குடன் செய்யப்படும் காரியம் அல்ல. மக்களுக்குக் கொடுத்துள்ள வாக்குகளை நிறைவேற்றிட நாம் எடுக்கும் முயற்சிகளாகும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் கமகெதர திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# நடனக் கலைஞர் குழு இந்தியா பயணம்



இந்தியா, ஒடிசா மாநில அரசால் ஒடிசா கட்டாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ”பாலி யாத்ரா திருவிழா” வில் பங்கேற்பதற்காக இலங்கை சர்வதேச பௌத்த கல்வி நிறுவனத்திலிருந்து ஒன்பது கண்டிய நடனக் கலைஞர்கள் கொண்ட குழு இந்தியாவிற்குச் செல்ல ஆயத்தமாகியுள்ளனர். கண்டி இந்திய உதவித் தூதுவர் வி.எஸ்.சரண்யா இந்திய உதவித்தூதரகத்தில் நேற்று இவர்களுக்கு வாழ்த்து தெரிவித்ததோடு,அறிவுரைகளை வழங்கி இவர்களுடன் எடுத்துக்கொண்ட படத்தையே காண்கிறீர்கள். (படம் - கண்டி நிருபர்)

## வடக்கு,கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை போன்றவை நிராகரிக்கப்பட்டிருந்தமை அரசியல் தீர்வு பற்றிய சரியான நிலைப்பாடு எதுவுமில்லை.





# ரோஹண விஜேவீரவும் இன்றைய ஜேவிபியும்!

கனுஷியா புஷ்பகுமார்

பட்டபெந்தி தொன் நந்தசிறி விஜேவீர எனப்படும் ரோஹண விஜேவீர , 1943ஆம் ஆண்டு ஜ"லை மாதம் 14ஆம் திகதி பிறந்தவர் ஆவார்.

இவர் ஒரு மார்க்சியப் புரட்சியாளர். இலங்கையின் ஒரு காலத்தில் தீவிரவாத இயக்கமாக இருந்த ஜே.வி. பி என அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணியை அமைத்து அதன் தலைவராக இருந்தவர். இவரது தந்தை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தவராக இருந்தவர்.

1982ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்நாட்டில் இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் ரோஹண விஜேவீர போட்டியிட்ட நிலையில் தேர்தலில் 2 இலட்சத்து 73 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

இடதுசாரி தலைவர்களான கொல்வின் ஆர்.டி. சில்வா மற்றும் வாசுதேவ நாணயக்கார இருவரையும் விட அதிகளவிலான வாக்குகளை ரோஹண விஜேவீர பெற்றுக்கொண்டமை இங்கு சிறப்பம்சமாகும்.

அந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர். ஜயவர்தன வெற்றி பெற்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் ஜே.ஆர் ஜயவர்தனவின் அடுத்த இலக்காக 1982ஆம் ஆண்டு இறுதியில் இடம்பெற வேண்டிய பொதுத் தேர்தல் இருந்தது.

அப்போது ஜே.ஆர் ஜயவர்தனவின் அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் 5/6 பெரும்பான்மை காணப்பட்டது.

நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் மற்றும் 5/6 பெரும்பான்மை ஆகியவற்றால் அவரால் செய்ய முடியாத ஒரு விடயம் இருக்கவில்லை.

எனினும், அப்போதைய சூழலில் நாடாளுமன்ற தேர்தல் ஒன்றை நடத்தினால் நிலவி வந்த 5/6 பெரும்பான்மையை தக்க வைத்துக்கொள்ள முடியாமல் போகும் என்பதை ஜே.ஆர். ஜயவர்தன உணர்ந்தார்.

அதன்காரணமாக நாடாளுமன்ற தேர்தல் ஒன்றை நடத்தாமல், சர்வஜன வாக்கெடுப்பு வாக்கெடுப்பை நடத்தி நாடாளுமன்ற அதிகாரத்தை மேலும் ஐந்து வருடங்களுக்கு நீடிப்பது ஜே.ஆர். ஜயவர்தனவின் நோக்கமாக இருந்தது.

1982ஆம் ஆண்டு இடம்பெற்ற அந்த வாக்கெடுப்பு இன்றளவில் பிரசித்தி பெற்றது ஆகும். இந்த அரசியல் விளையாட்டை சவாலாக ஏற்றுக்கொண்ட ஜே.வி.பி தலைவர் ரோஹண விஜேவீர நீதிமன்றில் வழக்கு தொடுத்தமை ஜே.ஆரின் ஆட்சிக்கு விடுக்கப்பட்ட பெரும் சவாலாகும்.

இதற்கிடையில், வடக்குக் கிழக்கில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டமும் ஆம்பித்துள்ளது. அதன் விளைவாகவே 1983ஆம் ஆண்டு ஜ"லை கலவரம் இடம்பெற்றது.

1983ஆம் ஆண்டு ஜ"ன் மாதம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலி 13 இராணுவத்தினர் தமிழ் போராளிகளின் கெரில்லாத் தாக்குதலில் கொலை செய்யப்பட்டனர்.

கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரின் சடலங்களும் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டபோது கொழும்பில் வாழ்ந்த தமிழர்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றன. பலர் உயிரிழந்தனர். சொத்துகள் சேதமாக்கப்பட்டன. பெண்கள் பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இதுவே கொழும்பு கறுப்பு ஜ"லை கலவரம் என இன்று வரை அழைக்கப்படுகிறது.

சர்வஜன வாக்கெடுபுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த ஜே.வி.பிக்கு பதிலடி கொடுக்க சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருந்த ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு கொழும்புக் கலவரம் நல்ல வாய்ப்பாக இருந்தது.

மேற்குறிப்பிட்ட சம்பவங்களுடன் தொடர்புடையதாக 1983ஆம் ஆண்டு ஜ"லை மாதம் 29ஆம் திகதி ஜே.வி.பி உள்ளிட்ட மேலும் மூன்று இடதுசாரிக் கட்சிகளுக்குத் தடை விதிக்கப்பட்டன.

இதன் காரணமாக ரோஹண விஜேவீர உள்ளிட்ட குழுவினருக்கு மறைமுக அரசியலில் ஈடுபட நேர்ந்தது.

அதன்போது, இந்தியா, இலங்கை அரசியல் களத்தில் திரைக்கு பின்னால் பல விடயங்களை நிகழ்த்தி வந்தது.

விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழ் போராளிகளுக்கு ஆயுத பயிற்சிகளை வழங்கி அவர்களை போஷணை செய்தது இந்தியா தான் என்பது அப்போது இலங்கை அரசாங்கத்தின் பிரச்சினையாக காணப்பட்டது.

இந்தியாவின் இந்த வகிபாகம் தொடர்பில் அதிக காலமாக விஸ்தரிக்கப்பட்ட காரணிகளை முன்வைத்து வந்த அரசியல் செயற்பாட்டாளராக ரோஹண விஜேவீர காணப்பட்டார்.

மறைமுக அரசியலில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் ரோஹண விஜேவீர ஈழத் தமிழர்களின் தமிழீழ போர் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தி வந்தார், அந்த சந்தர்ப்பத்திலேயே தமிழீழத்திற்கான தீர்வு என்ன என்ற பெயரில் புத்தகம் ஒன்றையும் எழுதி வெளியிட்டார்.

வடக்கு,கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை போன்றவற்றை அவர் நிராகரித்தார். அரசியல் தீர்வாக அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

எனினும், 1987 ஆம் ஆண்டு ஜ"லை மாதம் 29 ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் ஜேஆர் ஜயவர்தனவும் செய்து கொண்ட இந்திய– இலங்கை ஒப்பந்தத்துக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டார். ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் முறைமைக்கும் ஜே.வி.பி எதிர்ப்பு தெரிவித்தது. இந்த நிலையில், 1989 ஆம் ஆண்டு கண்டி உலப்பனையில் உள்ள தேயிலைத் தோட்டம் ஒன்றில், அத்தநாயக்க என்ற பெயரில் முகாமையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது இலங்கைப் படையினரால் ரோஹண விஜேவீர கைது செய்யப்பட்டார்.

1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி கொழும்பு பொரள்ளைப் பிரதேசத்தில் வைத்துக் கொலை செய்ய்ப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

ஆனால் 1989ஆம் ஆண்டு இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்ட தனது கணவர், பின்னர் காணாமல் ஆக்கப்பட்டதாகக் குற்றம் சுமத்தி கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ரோஹன விஜேவீரவின் மனைவி ஸ்ரீமதி சித்திராங்கனி ஆட்கொணர்வு மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

எனினும், ரோஹண விஜேவீர இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்ட நிலையில், ஜே.வி.பியின் மற்றுமொரு குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான பிரேமதாச அரசாங்கமே அப்போது பதவியிலும் இருந்தது.

ஜே.வி.பியின் ஸ்தாபகர் மற்றும் தலைவர் ரோஹண விஜேவீர கைது செய்யப்பட்டமை மற்றும் உயிரிழந்தமை சம்பந்தமான எந்த தகவல்களும் ஆவணப்படுத்தப்படவில்லை.

1971ஆம் 1987- 88ஆம் ஆண்டுகளில் இலங்கையின் தென்பகுதியில் தீவரமான ஆயுதப் புரட்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி, 1994ஆம் ஆண்டு முதன் முதலாக அரசியலில் ஈடுபட்டது. 1994ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி.போட்டியிட்டு, இலங்கை நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனத்தைப் பெற்றது.

சந்திரிக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஜே.வி. பி ஆதரவு வழங்கியது. நிஹால் கலபதி ஜே.வி.பியின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யபட்டிருந்தார்.

ரோஹண விஜேவீரவுக்குப் பின்னர் ஜேவிபியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற சோமவன்ச அமரசிங்க போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துப் பின்னர் தலைமறைவில் வாழ்ந்தார்.

அதன் பின்னர் இரகசியமாக பிரித்தானியாவுக்குச் சென்று அரசியல் தஞ்சம் கோரியிருந்தார்.

2000 ஆம் ஆண்டு சந்திரிகாவின் அரசாங்கம் பெரும்பான்மை இல்லாமல் தடுமாறியபோது ஜேவிபியின் ஆதரவை நாடாளுமன்றத் தேர்தலில் பெற முற்பட்டார். இதன் காரணமாக பிரித்தானியாவில் தலைமைறைவாக வாழ்ந்திருந்த சோமவன்ச அமரசிங்கவுக்கு இலங்கைக்குக் வருவதற்கு சந்திரிக்கா அனுமதி கொடுத்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடும் பிரசாரங்களிலும் அவர் ஈடுபட்டிருந்தார்.

அதேவேளை 2006ஆம் ஆண்டு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளராக பதவி வகித்த விமல் வீரவன்ச, ஜே.வி. பியில் இருந்து விலகி தேசிய சுதந்திர முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்து மகிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினார்.

2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான பிரசாரங்களில் ஜே.வி.பி. ஈடுபட்டது.

2006ஆம் ஆண்டு மீண்டும் போர் ஆரம்பித்தபோது புலிகளுக்கு எதிராகப் போரிடுவதற்கு சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்குரிய ஏற்பாடுகளை ஜேவிபி செய்திருந்தது.

இப்பின்னணியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய ஜே.வி. பி. ஈழத் தமிழர் விவகாரத்தில் நிர்வாக மட்டத்தில் அதிகாரங்களை பரவலாக்கம் செய்தால் போதும் என்றே பிரசாரம் செய்து வருகின்றது.

எவ்வாறாயினும், இடதுசாரி போன்ற காரணங்களால் தடை செய்யப்பட்ட ஜே.வி. பி அமைப்பு இன்று அரியாசனத்தில் அமர்த்தப்பட்டுள்ளது.

இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பை முழுமையான சோசலிசக் கொள்கையாக்க வேண்டுமென ரோஹண விஜேவீர அன்று முன்வைத்த கொள்கைகளை இன்றை ஜேவிபி பின்பற்றுகிறதா என்ற கேள்விகளும் உளளன.

தற்போது அநுரகுமார திஸாநாயக்க இலங்கையில் சோசலிச சமத்துவத்தை ஏற்படுத்த ஆயுதப் புரட்சி தேவையில்லை என்றும் வார்த்தைகளினாலும், செயற்பாடுகளினாலும் மாற்றத்தைக் கொண்டு வரமுடியும் எனவும் பிரசாரம் செய்கிறார்.

தேசிய மக்கள் சக்தியானது ஜே.வி.பியின் அரசியல் கூட்டணியாக இருந்தாலும் கூட சில கொள்கை மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது.

அன்று இருந்த அரசாங்கங்களும், அரசியல் தலைவர்களும் ஜே.வியினரை ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்கு தள்ளியிருந்தாலும் 76 வருட கால ஊழல் அரசியலை ஒழிக்க வித்திட்டவராக ரோஹண விஜேவீர பேசப்படுகிறார். அதனை அநுரகுமார திஸாநாயக்க முன்னெடுத்து இன்று ஆட்சியைப் பிடித்துமுள்ளார்.

ஆனால் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பை அவர் மாற்றுவாரா அவ்வாறு மாற்றினாலும் அந்த புதிய அரசியல் யாப்பில் தமிழர்களின் அரசியல் விடுதலைக்குரிய தீர்வுகள் முன்வைக்கப்படுமா என்பது பற்றிய சந்தேகங்கள் நீடிக்கின்றன.

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த பின்னர் 1972 ஆம் ஆண்டு இறைமையும் தன்னாதிக்கமும் உள்ள நாடாக பிரித்தானிய அரசிடம் இருந்து முழுமையாக விடுதலை பெற்றது. அதன் பின்னர் 1972ஆம் ஆண்டு இலங்கைக் குடியரசின் முதலாவது அரசியல் யாப்பு சிறிமாவோ பண்டார நாயக்க



தலைமையிலான ஸ்ரீலங்கா சுத்திரக் கட்சி அரசாங்கம் புதிய யாப்பை உருவாக்கியிருந்தது.

அதன் பின்னர் 1978ஆம் ஆண்டு ஜேஆர்.ஜயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இரண்டாவது யாப்பை உருவாக்கியது. இந்த யாப்பின் பிரகாரமே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டது.

இன்றுவரை 20 திருத்தங்களுடன் நடைமுறையில் இருக்கும் இந்த யாப்புக்கு எதிராகப் போராடிய ஜேவிபி இன்று அந்த அரசியல் யாப்பின் மூலமான ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது.

ஆகவே புதிய அரசியல் யாப்பு ஒன்றை ஜேவிபி உருவாக்கினால் அது இலங்கையின் மூன்றாவது அரசியல் யாப்பாக அமையும். ஆனால் தமிழர்கள் முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் என்னவாகும்?

# கொழும்பு மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனதால் மனம் வருந்துகின்றேன்

## - விசேட அறிக்கையில் மனோ தெரிவிப்பு

"நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. வெற்றி பெற்ற அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். ஆட்சி அமைக்கும் அநுரகுமார திஸாநாயக்க அரசுக்கும் எனது வாழ்த்துக்கள்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று திங்கட்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"நாட்டின் தேசிய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற கொழும்பு மாவட்டத்தில், தமிழர் பிரதிநிதித்துவத்தை இரட்டிப்பு ஆக்க நமது கட்சி எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை. இன்று இருந்த ஒரு தமிழர் பிரதிநிதித்துவமும் இல்லாமல் போய் விட்டது. இதையிட்டு நான் மன வருத்தம்



அடைகின்றேன்.

அடித்துள்ள அரசியல் அலையின் மத்தியிலும் நாடெங்கும் மக்கள், எமது வேட்பாளர்கள் போட்டியிட்ட ஏழு மாவட்டங்களில் 2 இலட்சத்து 37 ஆயிரத்து 123 விருப்பு வாக்குகளை எமது வாக்காளர்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு வழங்கி உள்ளார்கள். அவர்களுக்கு விசேட நன்றிகள்.

2010 ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்தில் போராடிப் பெற்ற தமிழர் பிரதிநிதித்துவமும் இன்று இல்லாமல் போயுள்ளது. அதையிட்டும் நான் கவலை அடைகின்றேன்.

கடும் அரசியல் அலையின் மத்தியில், தமிழ் வாக்காளர் சிறுபான்மையாக வாழும் ஏனைய இரத்தினபுரி, கேகாலை, கண்டி, பதுளை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்ட எமது வேட்பாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

கொழும்பு தலைநகர் மாவட்டத்தில், இருந்த தமது இரண்டு பிரதிநிதித்துவங்களை தக்க வைத்துக் கொண்டு, இன்று அதை மூன்றாக அதிகரித்தும் கொண்ட, தமிழ் பேசும் சகோதர முஸ்லிம் உடன்பிறப்புகளுக்கு எனது இதயபூர்வ பாராட்டுகள்." – என்றுள்ளது.

# சீன தூதுவர் பருத்தித்துறைக்கு விஜயம்





இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழுவினர் நேற்று(19) செவ்வாய்க்கிழமை பருத்தித்துறைக்கு விஜயம் மேற்கொண்டனர். வட மாகாணத்திற்கு மேற்கொண்டுள்ள விஜயத்தின் ஒரு பகுதியாக சீன தூதுவர் பருத்தித்துறை – சக்கோட்டை முனைக்கு குழுவினரோடு சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு சீன தூதுவர் பதிலளிக்கையில், வடக்கு கிழக்கில் உள்ள சிறு கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி வலைகள் உள்ளிட்ட நிவாரண உதவிகள் சீன அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்ற வேறுபாடுகள் இன்றி இலங்கையர்களாக வாழ்வதற்கு சீன அரசு தொடர்ந்து உதவும் என்றார்.

## அரசாங்கத்தை பொறுப்புக்கூறச் செய்வதற்கு

# எதிர்க்கட்சியில் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் இருப்பது அவசியம்



"அரசாங்கத்தை பொறுப்புக்கூறச் செய்வதற்கு நடந்து கொண்டிருக்கும் சீர்திருத்தங்களில் அனுபவம் வாய்ந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருப்பது முக்கியமானதாகும் – ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்".

இ.தொ.கா பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது சமூக வலைத்தளங்களினூடான பதிவுகளிலே இவ்வாறு கருத்து பகிர்ந்துகொண்டார்.

அப்பதிவுகளில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அதிகூடிய பெரும்பான்மையை கருத்தில் கொண்டு, அரசாங்கத்தை பொறுப்புக்கூறச் செய்வதற்கு நடந்துகொண்டிருக்கும் சீர்திருத்தங்களில் அனுபவம் வாய்ந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருப்பது முக்கியமான ஒன்றாகும்.

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் ஆசனம் காஞ்சன விஜயசேகரவுக்கு வழங்கப்படும் என நான் நம்புகின்றேன். குறிப்பாக எமது நாட்டின் வரலாற்றில் எரிசக்தித் துறையில் மிகவும் கடினமான சீர்திருத்தங்களுக்கு காஞ்சன தலைமை தாங்கினார். நமது எரிசக்தித் துறையில் போட்டி, நியாயமான விலை நிர்ணயம் மற்றும் மக்களுக்கான பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கு அவர் திடமான திட்டங்களை அமைத்தார். அவர் எடுத்த முடிவுகளின் அரசியல் விளைவு, தனக்கு சாதகமாக இருக்காது என்பதை அறிந்தே இதையெல்லாம் செய்தார்.

காஞ்சன தனது தேர்தல் வாய்ப்புகளைப் பணயம் வைத்து மேற்கொண்ட சீர்திருத்தங்களின் இறுதி வெற்றியாளர்கள் இலங்கை நுகர்வோராக இருப்பார்கள்.

இன்று, இலங்கையர்கள் எரிபொருளை வாங்கும் போது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அல்லது இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திற்கு இனி கட்டுப்படுவதில்லை.

அதேபோல், மின்சாரச் சட்டத்தில் அவரது சீர்திருத்தங்களை நாம் பின்பற்றினால், இலங்கை மின்சார சபையின் அதிக விலைகள் மற்றும் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு ஆகியவற்றால் இலங்கையர்கள் சிக்க மாட்டார்கள்.

தொலைத்தொடர்பு மற்றும் எரிபொருளைப் போலவே, இலங்கையர்கள் தங்கள் ஆற்றல் வழங்குநரைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஏகபோகங்களிலிருந்து விடுபடுவதற்கும் தகுதியானவர்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# மாத்தளை மாவட்டத்தில் தோல்வியடைந்த பிரபலங்கள்

(எம். எஸ். எம். மசாஹிம்)

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் பல அரசியல் பிரபலங்கள் படுதோல்வி அடைந்து அரசியலிலிருந்து மக்களினால் ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு படு தோல்வியடைந்த அரசியல் பிரபலங்களில் ரணில் தலைமையிலான கடந்த ஆட்சியின் போது இராஜாங்க பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த பிரமித பண்டார தென்னக்கோன், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன குமார திசாநாயக்க, மாத்தளை மாநகர சபை முன்னாள் முதல்வர் சந்தனபிரகாஷ் மற்றும் முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சரும் கெபினட் அமைச்சருமான நந்திமித்திர ஏக்கநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் அலுவிஹார, வசந்த அலுவிஹார ஆகியோர் அடங்குகின்றனர்.

# யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடாதிபதியாக விவியன் சத்தியசீலன் தெரிவு

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக சித்த வைத்தியக் கலாநிதி விவியன் சத்தியசீலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற சித்த மருத்துவபீட சபை கூட்டத்தில், நடாத்தப்பட்ட பீடாதிபதி தெரிவின் போது 06 மேலதிக வாக்குகளைப் பெற்று, கலாநிதி விவியன் சத்தியசீலன் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தில் இதுவரை காலமும் சித்த மருத்துவ அலகாகச் செயற்பட்டு வந்த சித்த மருத்துவ கற்கை அலகு கடந்த ஜூலை 26 ஆம் திகதி பீடமாகத் தரமுயர்த்தப்பட்டது. சித்த மருத்துவ பீடத்தில் நஞ்சியல் மற்றும் பரம்பரை மருத்துவம், மனித உயிரியல், சமூகநல மருத்துவம், சிரோரோகமும் அறுவை மருத்துவமும், நோய் நாடல் சிகிச்சை, குணபாடம், மூலதத்துவம் ஆகிய கற்றல் துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சித்த மருத்துவ அலகு பீடமாகத் தரமுயர்த்தப்பட்ட நாளிலிருந்து முன்னாள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி விவியன் சத்தியசீலன் பதில் பீடாதிபதியாகச் செயற்பட்டு வந்தார்.

# 1000 நாட்களை எட்டியது ரஷ்யா - உக்ரைன் போர் இதுவரை 659 குழந்தைகள் பரிதாபகரமாக உயிரிழப்பு

(எஸ்.டொரின்)

ரஷ்யா-உக்ரைன் இடையிலான போர் கடந்த 2022ஆம் ஆண்டு பிப்ரவரி 24ஆம் திகதி தொடங்கியது. ஆரம்ப நாளில் இருந்து இன்று வரை 1000 நாட்களை எட்டியுள்ள நிலையில், சர்வதேசத்தின் பார்வையும் இந்த போரின் மீதுதான் உள்ளது.

மேலும், இந்தப் போரில் இதுவரை 2,406 குழந்தைகள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். 659 குழந்தைகள் உயிரிழந்தும் 1747 குழந்தைகள் காயமடைந்துமுள்ளதாக யுனிசெஃப் அமைப்பு தெரிவித்துள்ளது.

நேட்டோ அமைப்பு நாடுகளில் இணைய கூடாது என்பதற்காக ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 ஆம் திகதி முதல் அந்நாட்டின் மீது கண்மூடித் தனமாக போர் தொடுத்து வருகிறது.

உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உதவிகளை அளித்து வருவதால் உக்ரைனும், ரஷ்யாவுக்கு எதிரான போரை தீவிரப்படுத்தி வருகிறது.

இந்தப் போர் இரண்டு ஆண்டுகளை கடந்திருக்கும் நிலையில், உக்ரைனுக்கு ஆதரவாக சில நாடுகளும், ரஷ்யாவுக்கு ஆதரவாக சில நாடுகளும் செயற்பட்டு வருகின்றன. ஐ.நா பொதுச் செயலாளர் முதல் உலக நாட்டுத் தலைவர்கள் பலரும் இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த வண்ணம் உள்ளனர். ஆனால், ரஷ்யா தொடர்ந்து தாக்குதலை நடத்திய வண்ணமே உள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் 120 ஏவுகணைகளும், ஆளில்லா விமானங்கள் மூலம் மின் கட்டமைப்புகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

தற்போது யுனிசெப் வெளியிட்டிருக்கும் தகவலின்படி, ரஷ்யா- உக்ரைன் போர் 1000 நாட்களை எட்டும் நிலையில் இதுவரை 609 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 1,747 குழந்தைகள் காயமடைந்து கவலைக்கிடமான நிலையில் இருக்கிறார்கள்.

ஒவ்வொரு வாரமும் குறைந்தது 16 குழந்தைகள் உயிரிழந்தும் காயமடைந்தும் உள்ளனர் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், ஆயிரக்கணக்கான குழந்தைகள் தொடர்ச்சியான தாக்குதல்களால் தங்கள் வாழ்க்கையை இழந்துள்ளனர்.

உணவு, மின்சாரம், குடிநீர் மற்றும் பிற தேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கூட இல்லாமல் வாழும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஜூலையில் இருந்து உக்ரைனில் தாக்குதல் அதிகரிப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் உயிரிழப்புகள் மற்றும் நாட்டின் உள்கட்டமைப்பும் நிலைகுலைந்துள்ளது என்று யுனி செஃப் தெரிவித்துள்ளது.

யுனிசெஃப் நிர்வாக இயக்குநர் கேத்தரின் ரஸ்ஸல் இதுதொடர்பில் கூறுகையில்,

அதிகப்படியான குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். இது அதிர்ச்சியளிக்க கூடியதாக உள்ளது. இது அடுத்த தலைமுறையை இல்லாமல் செய்வதற்கான ஒரு அறிகுறி, மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம்.

குழந்தைகள் பொதுவாக படுக்கைகளில், மருத்துவமனைகள் மற்றும் விளையாட்டு மைதானங்களில் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு இளம் உயிர்கள் பலியானது அவர்களின் குடும்பங்களுக்கு மிகப் பெரிய வலியை ஏற்படுத்தும். மேலும், பல குழந்தைகள் பயத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். இது போன்ற விஷயங்கள் அவர்களின் உளவியலை பாதிக்கும்.

கடந்த 1000 நாட்களில், குறைந்தது 496 கல்வி நிறுவனங்கள், 662 சுகாதார வசதிகள் சேதமடைந்துள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார். உக்ரைனில் குழந்தைகள் பாதிக்கப்படுவதை இனி மேலும் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# மலையக ரயில் சேவைகள் பாதிப்பு




கண்டியில் இருந்து பதுளை நோக்கி பயணித்த கலப்பு ரயில் நேற்று (19) பிற்பகல் தியத்தலாவ நிலையத்தில் தடம் புரண்டதால் மலையக ரயில் சேவையில் இடையூறு ஏற்பட்டதாக ரயில்வே திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கண்டியில் இருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த 1596 இலக்க புகையிரதமே தடம் புரண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கி சென்ற மேலும் இரண்டு ரயில்கள் ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டன.

# உயர்தரத்திலான சுகாதார சேவையை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம்

## - சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

உயர்தரத்திலான சுகாதார சேவையை நாட்டு மக்களுக்கு வழங்குவதே புதிய அரசாங்கத்தின் நோக்கம் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று செவ்வாய்க்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

மக்கள் மிகப்பெரிய எதிர்பார்ப்புடனேயே இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்துள்ளனர். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் வழங்கியுள்ளனர்.



மக்களின் எதிர்பார்ப்பை நாம் முழுமையாக நிறைவேற்றுவோம். எமது நாடு பல வருடங்களாக சுகாதார சேவை தொடர்பில் ஆசியாவில் சிறந்த கௌரவத்தை பெற்றிருந்தது.சுகாதார அதிகாரிகள் மற்றும் அனைத்து சுகாதார பணியாளர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தனர்.

ஆனால் கடந்த காலங்களில் சில மோசமான அரசியல் நடவடிக்கைகளால் சுகாதார சேவையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது. ஆகவே மக்கள் எதிர்பார்த்துள்ள உயர் தரத்திலான சுகாதார சேவையை வழங்குவதே எமது அரசாங்கத்தின் நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விழிப்புடன் செயற்படுங்கள்; டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு



நாட்டில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக டெங்கு அபாயம் அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது.வீதிகளில் காணப்படும் குழிகளில் நீர் தேங்கி அங்கு நுளம்பு உருவாகும் நிலைமை ஏற்படும் வாய்ப்பு காணப்படுகிறது. எனவே பொது மக்கள் விழிப்புடன் செயற்படுமாறு அறிவிக்கப்படுகிறது.இதேவேளை,டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 44,000 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 11,078 ஆகும். கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்தும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓமானின் தேசிய தினம்: மேல் மாகாண ஆளுனர் பிரதம அதிதி

ஓமான் நாட்டின் 54வது தேசிய தினத்தை முன்னிட்டு கொழும்பில் உள்ள இலங்கைக்கான ஓமான் தூதரகம் சங்கரில்லா ஹோட்டல் லோட்டஸ் புலூ மில் தூதுவர் அஹமட் அலி செய்ட் அல் ரஸ்டி தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (18) நடைபெற்றது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக மேல்மாகாண ஆளுநர் யூசுப் ஹனீப் கலந்து கொண்டிருந்தார். இதன் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கையில் உள்ள ஏனைய நாடு களின் தூதரங்களின் தூதுவர்கள் மற்றும் பிரதிநிதிகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள், தூதரகத்தின் அதிகாரிகள் அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஓமானின் தேசிய தினத்தை முன்னிட்டு பிரதம அதிதிகள் உள்ளிட்டவர்கள் தூதுவருடன் இணைந்து கேக் வெட்டி கொண்டாடினர்.

## மக்கள் வங்கியின் புதிய தலைவர் பதவியைப் பொறுப்பேற்றார்

மக்கள் வங்கியின் புதிய தலைவராக பேராசிரியர் பீ.என்.டி. பெர்னாண்டோ நேற்று திங்கட் கிழமை தமது கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய தலைவரான பேராசிரியர் பெர்னாண்டோ ,நிதி வங்கியியல் மற்றும் உயர் கல்வி ஆகிய துறைகளில்,25 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர்.

களனிப் பல்கலைக்கழகத்தில் நிதியியல் கற்கைப்பிரிவில் பேராசிரியராகவும், அதன் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

அரச பொருளாதாரத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பேராசிரியர் பெர்னாண்டோ பெற்றுள்ளார்.

பிரசித்தி பெற்ற கொழும்புத் திட்ட புலமைப்பரிசில் மூலமாக, மேற்கு வங்காள தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் MBA பட்டத்தையும் பெற்றுள்ள அவர், களனி பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவ (கணக்கியல்) பட்டதாரியும் ஆவார்.

கொழும்பு பங்குச் சந்தை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு போன்ற இலங்கையிலுள்ள முன்னணி நிதி நிறுவனங்களில் நம்பிக்கைக்குரிய ஆலோசகராகவும், வளவாளராகவும் பேராசிரியர் பெர்னாண்டோ சேவையாற்றியுள்ளார்.

# அமைச்சரவை நியமனத்தில் இன விகிதாசாரம் பேண வேண்டும்

(கனகராசா சரவணன்)




புதிதாக ஆட்சி அமைக்கும் அரசு விகிதாசார அடிப்படையில் 19 சிங்கள அமைச்சர்களும் 6 தமிழ் அமைச்சர்களும் தெரிவு செய்யப்படவேண்டும்.

எனவே, சிறுபான்மையினருக்கும் அமைச்சுக்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள ஈபி.ஆர்.எல். எப் கட்சி காரியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை (18) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார் புதிய அரசு மக்களின் ஆணையை பெற்று பல சதாப்தங்களுக்கு பின்னர் கூடுதலாக ஊழலுக்கு எதிராக மாற்றத்தை விரும்பியவர்கள் வாக்களித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். நல்ல கொள்கைகளையுள்ள நல்லாட்சி அரசு ஆட்சிய அமைக்க போகின்ற நிலையில் சிறுபான்மையினர் பாதிக்கப்படமால் இருக்க வேண்டுமாயின் விகிதாசார அடிப்படையில் அமைச்சுக்களை நியமிக்கப்படவேண்டும். அது தவறும் பட்சத்தில் அவர்கள் எவ்வாறு நல்லாட்சியை அமுல்படுத்து வார்கள் என்ற சந்தேகம் மக்களுக்கு மத்தியில் தொற்றி நிற்கும். எனவே நல்ல கொள்கைகளை முன்வைக்கின்ற அடிப்படையில் இந்த புதிய அரசு 25 அமைச்சரவையில் இன விகிதாரத்தின் அடிப்படையில் 19 சிங்கள அமைச்சர்களும் 6 தமிழ் அமைச்சர்களும் தெரிவு செய்யப்படவேண்டும்.

நாட்டில் 9 சதவீதமாக உள்ள விசேட தேவையுடைய சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை பல சதாப்தங்களுக்கு பிறகு இந்த அரசு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதை கரம்கூப்பி வாழ்த்துகின்றேன் என்றார்.

## களுதாவளையில் வாசகர்வட்ட பரிசளிப்பு விழா




மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை பொதுநூலகமும், வாசகர் வட்டமும், இணைந்து நடாத்திய தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நிகழ்வு நேற்று செவ்வாய்கிழமை களுதாவளை பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

களுதாவளை பொதுநூலக உதவியளர் வ.கிருபாகரனின் ஒழுங்கமைப்பில், வாசகர் வட்டத்தின் தலைவர் இ.கோபாலபிள்ளையின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் செயலாளர் ச.அறிவழகன் பிரதம அதிபதியாக கலந்து கொண்டிருந்தார். மேலும் இதன்போது மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் எஸ்.குகநேசன், மற்றும் ஆலயங்களின் நிருவாகத்தினர், அதிபர்கள், பாடசாலை மாணவர்கள், வாசகர் வட்டத்தினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு பாராட்டு



(ஒலுவில் செய்தியாளர்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட ஆங்கில மொழி தினப்போட்டியில் முதலாமிடத்தினையும், மாகாண மட்ட ஆங்கில மொழி தினப்போட்டியில் முதலாமிடத்தினையும் பெற்று பாடசாலைக்கும் பாலமுனை பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்த அல் ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவிகள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய மட்ட ஆங்கில மொழித்தினப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இப்போட்டியில் பங்குபற்றிய பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவி அனஸ்தீன் அதீன் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்டார். அதேபோன்று மாகாண மட்ட போட்டியில் பங்குபற்றிய ஜே.அனிப்கா பானு முதலாமிடத்தினை பெற்று தேசிய மட்ட போட்டியில் கலந்துகொண்டார்.

குறித்த இரு மாணவிகளையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (18) பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூ ரியில் அதிபர் பீ.முஹாஜிரீன் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் பிரதி அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழுவினர் கலந்து கொண்ட இந்நிகழ்வின் போது சாதனைக்குரிய இரு மாணவர்களும் பேண்ட் வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

## பங்களாதேஷ் பிரஜைகள் கைது

வீசா காலத்தை மீறி நாட்டில் தங்கியிருந்த பங்களாதேஷ் பிரஜைகள் 08 பேர், கட்டுநாயக்க பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் ஆதியம்பலம், கோவின்ன பகுதியில் சுற்றுலா விடுதியில் வைத்து திங்கட்கிழமை (18) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இவர்கள் இலங்கையின் குடிவரவு நிபந்தனைகளை மீறி சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியுள்ளனர்.

ஈரான் மற்றும் சவூதி அரேபியாவிற்கு தப்பிச் செல்லும் நோக்கிலேயே தங்கிருந்ததாக தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்வதற்கு மொழிபெயர்ப்பாளரின் உதவியை பொலிஸார் பெற வேண்டியிருந்தது.

கட்டுநாயக்க பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் திங்கட்கிழமை (18) இரவு ஆதியம்பலம், கோவின்ன பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த சுற்றுலா ஹோட்டல் சுற்றிவளைப்புக்கு உட்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பங்களாதேஷ் பிரஜைகள் எதிர்வரும் மினுவாங்கொட நீதவான் நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை (19) ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# ஜனாதிபதி, பிரதமர் தெரிவுகள் ஒரே தேர்தலில் நடைபெறவேண்டும்

(நூருல் ஹுதா உமர்)



புதிய அரசின் வெற்றியின் மூலம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தெரிவுகள் ஒரே தேர்தலில் நடைபெறும் முறையில் அரசியலமைப்பு சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமெனத் தெரிவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரசில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்ட எஸ்.எம். சபீஸ் , எங்கள் கட்சிக்கு ஒர் ஆசனத்தைப் பெற்றுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். தனது அலுவலகத்தில் நடைபெற்ற தேர்தல் பணிக்காக பணி செய்தோருக்கும், வாக்களித்த மக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,அரசாங்கம் பெற்றுள்ள இமாலய வெற்றிக்கு எங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வெற்றியின் மூலம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தெரிவுகள் ஒரே தேர்தலில் நடைபெறும் முறையில் அரசியலமைப்பு சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

கல்வி, தொழில், இடப்பங்கீடு, சம உரிமை, நிர்வாக சமச்சீர் விடயங்களில் புரட்சி ஏற்படுத்த நல்லதொரு சந்தர்ப்பத்தினை மக்கள் வழங்கியுள்ளனர். இதை அரசு சாதித்துக் காட்ட வேண்டும். என்று தனது தேர்தல் பணிக்காக பணி செய்தோருக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் எஸ் எம் சபீஸ் தெரிவித்தார்

# கைதான முன்னாள் இராணுவ வீரர் இங்கினியாகல பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(பாறுக் ஷிஹான்)



கைத்துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவ வீரரிடம் மேலதிக விசாரணைகள் பல கோணங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.அம்பாறை வாவின்ன பரகஹகலே பகுதியில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட நபர் பின்னர் இங்கினியாகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அம்பாறை விசேட அதிரடிப் படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் இங்கினியாகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வாவின்ன பரகஹகலே பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட மைக்ரோ ரக தானியங்கி கைத்துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்கள் மற்றும் இரண்டு தோட்டா மெகசீன்கள் மற்றும் ஆயுதங்களை சுத்தம் செய்யும் கருவியை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் 51 வயதான ஓய்வுபெற்ற இராணுவ சிறப்புப் படை வீரராவார். அவரது வீட்டுக் காணியில் புதைக்கப்பட்டிருந்த குறித்த 9 எம்.எம் துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அத்துடன் துப்பா க்கியின் இலக்கம் அழிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் தொடர்பிலும் துப்பாக்கி தொடர்பிலும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மேலும் சந்தேநக நபர் குறித்த துப்பாக்கியை போர் நடைபெற்ற காலத்தில் வட பகுதியில் கடமையில் இருந்து எடுத்து வந்தாரா அல்லது விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் பாவித்த துப்பாக்கியா அல்லது இராணுவ களஞ்சிய சாலையில் இருந்து எடுக்கப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதா என பல கோணங்களில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சி
# வாக்களித்தோருக்கு நன்றி தெரிவிப்பு



2024ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் மைக் சின்னத்தில் போட்டியிட்ட ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சிக்கு வாக்களித்த வாக்காளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக அக்கட்சியின் உபதலைவர் ஸப்வான் சல்மான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

குறுகிய காலத்திற்குள் ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சி புத்தளம் மாவட்டத்தில் கால்பதித்து, கட்சி நடவடிக்கைகளை ஆரம்பித்தது. புத்தளத்தில் தனித்துவமான சிறந்த அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கும், ஊழல் அற்ற அரசியல் கலாசாரத்தை நோக்கி பயணிக்க வேண்டும் என்ற கோஷத்துடன் நாம் கட்சி அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

புத்தளம் மாவட்ட மக்களுக்கு எமது கட்சியும், சின்னமும் புதிதாக இருந்தாலும் ஊழல் செய்யாத, மிகவும் திறமையான, அரசியலுக்கு பழக்கப்பட்ட வேட்பாளர்களை முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆப்தீன் எஹியா தலைமையில் களமிறக்கியிந்தோம். எனினும், எமது கட்சி இந்தப் பொதுத் தேர்தலில் கணிசமான அளவு வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

எமது கோரிக்கைகளை ஏற்று, எங்கள் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த புத்தளம் மாவட்டத்தில் உள்ள மூவின மக்களுக்கும், தேர்தல் காலங்களில் எங்களோடு கைகோர்த்து இரவு – பகல் என்று பாராது தீவிரமாக பணியாற்றிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், புத்தளத்தில் சிறந்த அரசியல் கலாசாரத்தையும், மக்களின் அபிலாஷைகளையும் பெற்றுக்கொடுக்க எமது கட்சி தொடர்ந்தும் களத்தில் இருக்கும் என்பதையும் பொறுப்புடன் தெரிவித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

# கிழக்கின் தொல்லியல் குழு கலைக்கப்பட வேண்டும்

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் காணப்படும் இடங்களை கண்டறிவதற்கும் அவற்றை பரிபாலிக்கவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாயவினால் அப்போதைய பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவின் தலைமையில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி உடனடியாக கலைக்கப்பட வேண்டுமென கிழக்கு மாகாண புத்திஜீவிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் மக்களின் பூர்வீக நிலங்களையும், வாழ்விடங்களையும் தொல்பொருளென வகைப்படுத்தி அவற்றை சுவீகரிக்கும் நோக்கில் இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் இருந்த பலர் அவர்கள் நியமிக்கப்பட்டபோது இருந்த பதவிகளில் தற்போது இல்லை. 2020 ஜூனில் நிறுவப்பட்ட இச்செயலணியில் பெரும்பான்மையானோர் பௌத்த தேரர்களாகவும், பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவான அரச அதிகாரிகளும், முக்கியஸ்தர்களும் இதில் இடம்பெற்றனர்.

இந்த செயலணியினது செயற்பாடுகள் தொடர்பில், சிறுபான்மையினரிடையே பல்வேறு சந்தேகங்களும் அச்சமும் ஏற்பட்டிருந்தன.

அப்போதைய சூழ்நிலையில் சிறுபான்மை சமூகப் பிரதிநிதிகள் மிகக் கடுமையாக இக்குழுபற்றி விமர்சித்து இது கலைக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்த போதும் அன்றைய ஜனாதிபதியும் அரசும் இதுபற்றி எதனையும் கவனத்திலெடுக்கவில்லை. இக்குழு அமைக்கப்பட்ட பின் திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் இருப்புகளுக்கும் அவர்களது பூர்வீக காணிகளுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது.

சிறுபான்மை மக்களான தமிழ், முஸ்லிம் மக்களின் குறிப்பாக கிழக்கு மாகாணத்து மக்களின் இருப்புக்கு ஆபத்தான இக்குழு உடனடியாக கலைக்கப்பட்டு வெற்றும் வெறிதுமாக ஆக்கப்பட வேண்டுமென கிழக்கு மாகாண புத்திஜீவிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழ் தேசியத்துடன் பயணிக்கும்
# ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் தலை வணங்குகிறேன்

(வி.சுகிர்தகுமார்)

அம்பாரை மாவட்ட பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற வேண்டும் எனும் ஒரே நோக்குடன் போட்டியிட்டு வெற்றிக்கு காரணமாக செயற்பட்ட அனைத்து வேட்பாளர்களுக்கும் நன்றி கூறுவதுடன் தமிழரசுக்கட்சியுடனும் தமிழ்த்தேசியத்துடன் பயணிக்கும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் நான் தலை வணங்குகின்றேன் என அம்பாரை



மாவட்டத்தின் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் (18) மாலை இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினரை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இத்தேர்தலில் அம்பாரை மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவத்தை இழக்கச் செய்யும் நோக்கில் பல கட்சிகள் உள்நுழைந்தனர். அம்பாரை மாவட்ட மக்களின் கடந்தகால நிலை தெரிந்தும் அவர்கள் களம் இறங்கினர்.

ஆனாலும் தன்மானமுள்ள தமிழ் மக்கள் தமிழரசுகட்சிக்கு வாக்களித்து பிரதிநிதித்துவத்தை காப்பாற்றியுள்ளனர். இதன் அடிப்படையில் எதிர்வரும் ஐந்து வருடங்கள் எனது சேவை நேர்மையானதாகவும் நீதியானதாகவும் நியாயமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் தொடரும் எனவும் குறிப்பிட்டார்.

ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் தலைவர் பி.தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டு கௌரவத்துடன் வரவேற்கப்பட்டார். இதைத் தொடர்ந்து மன்றத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளிலும் கலந்து கொண்டார். இதன் பின்னராக இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட அவரை பலரும் பாராட்டி பேசியதுடன் தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

நிகழ்வில் மன்றத்தின் சிரேஸ்ட தலைவர் வே.சந்திரசேகரம் உள்ளிட்ட நிருவாகத்தினர் மன்ற உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர் மீராகேணியில் பள்ளிவாசல் நிர்மாணம்






(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

மட்டக்களப்பு – ஏறாவூர் மீராகேணியில் புதிய பள்ளிவாசலொன்றை நிர்மாணிக்கும் கட்டுமான வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருவதாக மேற்படி பள்ளிவாசல் நிருவாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் புதிய பள்ளிவாசல் ஒன்றை அமைத்துத் தர ஆவன செய்யுமாறு பிரதேச மக்கள், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் செயல்திட்ட அபிவிருத்தி அமைச்சருமான அலி ஸாஹிர் மௌலானாவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அதனடிப்படையில் அலிஸாஹிர் மௌலானாவின் முயற்சியினால் பெறப்பட்ட 25 இலட்ச ரூபா நிதியைக் கொண்டு அப்பள்ளிவாசலின் நிருமாண வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

“மஸ்ஜிதுல் ரஹ்மான்” எனும் மேற்படி புதிய பள்ளிவாசலின் கட்டுமான வேலைகளை அலிஸா ஹிர் மௌலானா தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

## முகநூல், யூடியூப் ஊடாக: கற்பிட்டி தமிழ் கலை
# இலக்கிய மன்ற செயற்பாடுகள்

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது ஒரு வருடங்கள் நிறைவு பெறுவதையொட்டி மன்றத்தின் செயல்பாடுகளை விரிவுபடுத்தும் முகமாக தமிழ் கலை இலக்கிய மன்றம் என்ற பெயரில் முகநூல் பக்கம் மற்றும் யூடியூப் அலைவரிசைகள் என்பனவற்றை அதன் தலைமைக் காரியாலயத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன .




இந்நிகழ்வில் கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் எஸ் எம் அரூஸ் உப தலைவர் எம்.எம்.எம் நவ்ப் செயலாளர் எம்.எச. எம். சியாஜ் பொருளாளர் ஏ.எச். எப். பர்வின் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களான ஏ.ஆர்.எம் அஸ்கர், எஸ். சுப்ரமணியம் ஆகியோர்களின் பங்குபற்றுதலுடன் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வுகளை ஏ.ஆர். எம் அஸ்கர் சிறப்பாக தொகுத்து வழங்கியதுடன் நிகழ்வுகள் யாவும் நேரலையாக கற்பிட்டியின் மூத்த முகநூல் ஊடகவியலாளரான றிஸ்வி ஹுசைனின் முகநூல் வாயிலாக நேரலை ஒலிபரப்பு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை கல்வி நிருவாக சேவை:
# முதலாம் தர விசேட தரத்திற்கு சுஜாதா பதவி உயர்வு

(முகம்மட் முக்தார்)

மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளரும், கிழக்கு மாகாண பதில் வலயக்கல்விப் பணிப்பாளருமான சுஜாதா குலேந்திரகுமார் இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் வகுப்பு விசேட தரத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இலங்கை கல்வி நிருவாக சேவையின்– 111 ம் தரம் (கணிதம்) விசேட ஆளணிக்கு 2005 முதல் நியமிக்கப்பட்ட இவர் 2015 ம் ஆண்டு அச்சேவையின் 11 ம் தரத்திற்கும் பின் 2017 ம்



ஆண்டு தரம்–1 ற்கும் பதவி உயர்த்தப்பட்டார்.

கல்குடா வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றில் பிரதிக்கல்விப்பணிப்பாளராகவும், மட்டு.வின்செனட் பெண்கள் உயர் மகளிர் கல்லூரி அதிபராகவும் கடமையாற்றிய இவர் மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளராக கடமையாற்றுவதுடன் சம காலத்தில் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

இலங்கை கல்வி நிருவாக சேவை தரம்–1 ன் விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற முதலாவது தமிழ் பெண்மணி என்ற பெருமையையும் பெற்றுள்ளார். மட்டக்களப்பு வாழைச்சேனையை பிறப்பிடமாகக்கொண்ட இவர் மட்டக்களப்பை வசிப்பிடமாக கொண்டவர்.




## திருவேற்காடு - கோலடி ஏரி ஆக்கிரமிப்பு விவகாரம்:

# தச்சு தொழிலாளி தற்கொலை; பொதுமக்கள் வீதி மறியல்

திருவேற்காடு -கோலடி ஏரி ஆக்கிரமிப்பு விவகாரத்தில் தச்சு தொழிலாளி தற்கொலைக்கு நியாயம் கேட்டு பொதுமக்கள் வீதி மறியலில் ஈடுபட்டு வருவதால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 169 ஏக்கர் பரப்பளவு கொண்ட கோலடி ஏரி, ஆக்கிரமிப்பு காரணமாக 112 ஏக்கராக குறைந்துள்ளது. அவ்வாறு பரப்பளவு குறைந்துள்ள ஏரி பகுதியும் நாளுக்கு நாள் ஆக்கிரமிப்புக்குள்ளாகி வருகிறது. இந்நிலையில், கோலடி ஏரியை ஆக்கிரமித்துள்ள வீடுகளை அகற்ற முடிவு செய்த வருவாய்த்துறை அதிகாரிகள், முதல் கட்டமாக கடந்த மாதம் கோலடி-அன்பு நகர், செந்தமிழ் நகர் உள்ளிட்ட பகுதிகளில் ஏரியை ஆக்கிரமித்து புதிதாக கட்டப்பட்டு வந்த வீடுகள் மற்றும் ஆள் இல்லாமல் உள்ள வீடுகள் என, 33 வீடுகளை அதிரடியாக அகற்றினர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கோலடி பகுதியில் வீதி மறியல் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர் .





இதனையடுத்து வருவாய்த் துறையினர் மேற்கொண்ட கோலடி ஏரியை ஆக்கிரமித்திருந்த வீடுகளை கணக்கெடுக்கும் பணியில், 1,263 வீடுகள் கோலடி ஏரியை ஆக்கிரமித்திருந்தது தெரிய வந்தது.

இந்நிலையில், நீர்வள ஆதாரத்துறை உதவி பொறியாளர் சதீஷ்குமார் தலைமையிலான நீர்வள ஆதாரத் துறை அதிகாரிகள் கோலடி ஏரியை ஆக்கிரமித்து கட்டிய 1,263 வீடுகளை 21 நாட்களுக்குள் அகற்றுமாறு , ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு கடந்த 15ம் திகதி கடிதம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது

இதனால், கோலடி ஏரி பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகளில் வசித்து வந்த பொதுமக்கள் மிகுந்த மன உளைச்சலில் இருந்து வருகின்றனர். அந்த வகையில் மன உளைச்சலில் இருந்து வந்தவர்களில், தச்சு தொழிலாளியான சங்கர்(44) என்பவரும் அடக்கம். சங்கருக்கு மனைவி, இரு மகன்கள், ஒரு மகள் உள்ள நிலையில், அவர் வீட்டிலும் நீர் வள ஆதாரத் துறையினர் கடிதம் ஒட்டியுள்ளதால், தன் வீட்டை இடித்து விடுவார்கள்.

ஆகவே தான் தற்கொலை செய்து கொள்வேன் என, ஏற்கனவே குடும்பத்தாரிடம் சங்கர் தெரிவித்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், நவம்பர் 17ஆம் திகதி தன் வீட்டில் சங்கர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது. சங்கர் மரணத்துக்கு நியாயம் கேட்டும், கோலடி ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கைகளை கைவிடக்கோரி கோலடி, திருவேற்காடு-அம்பத்தூர் சாலையில் 400 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வீதி மறியலில் ஈடுபட்டு வருகின்றனர். சுமார் 3 மணி நேரத்துக்கு மேல் நடைபெற்றுவரும் இந்த போராட்டத்தால் திருவேற்காடு பகுதியில் பரபரப்பு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தாமதமாக வந்த மாணவிகளின் தலைமுடியை வெட்டிய ஆசிரியர்



இந்தியாவின் ஆந்திர மாநிலம், அல்லூரி சீதாராமராஜ" மாவட்டத்தில் இயங்கிவரும் பாடசாலையொன்றில் ஏராளமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் 18 மாணவிகள் பாடசாலைக்கு கால தாமதமாகி வந்துள்ளனர்.

இதனால் கோபம் அடைந்த ஆசிரியர் தாமதமாக வந்த 18 மாணவிகளின் தலைமுடியை வெட்டியுள்ளார்.

அத்துடன் நான்கு மாணவர்களை தாக்கி அவர்களை வெயிலில் நிற்க வைத்துள்ளார்.

இது தொடர்பில் யாரிடமும் கூற வேண்டாம் எனவும் மாணவர்களை மிரட்டியுள்ளதாக கூறப்படுகின்றது.

இச் சம்பவத்தால் மன முடைந்த மாணவிகள் இது தொடர்பில் தங்களது பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த மாணவிக ளின் பெறோர்கள் அளித்த முறைப்பா டையடுத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்ட நிலையில் மாணவர்களை தண்டித்த ஆசிரியரை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.

# நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் அனைத்து கட்சிக்கும் அழைப்பு

இந்தியாவின் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், 24 ஆம் திகதி நடக்கவுள்ள அனைத்து கட்சி கூட்டத்துக்கும் ஒன்றிய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இக் கூட்டத் தொடர் அடுத்த மாதம் டிசம்பர் 20 ஆம் திகதி வரையில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் நாடாளுமன்ற கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவது குறித்து ஒன்றிய அரசு சார்பில் கோரிக்கை முன் வைக்கப்படவுள்ளது.

மேலும் இம் மாதம் 26ஆம் திகதி நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அரசியல் சாசனத்தின் 75 ஆம் ஆண்டு விழாவும் கொண்டாடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மணிப்பூரில் சவப்பெட்டி ஊர்வலம்: தொடரும் பதற்றம்





இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மணிப்பூரில் குகி மற்றும் மெய்தி இன பழங்குடியின மக்களுக்கு இடையில் சிறு சிறு மோதல்கள் இடம்பெற்று வந்த நிலையில், கடந்த வருடம் மே மாதம் மிகப்பெரிய கலவரமாக வெடித்தது.

இக் கலவரத்தால் சுமார் 250 இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததோடு இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இந்நிலையில் கடந்த 11 ஆம் திகதி மீண்டும் குறித்த பகுதியில் வன்முறை வெடித்ததையடுத்து, அன்றிரவு குகி பழங்குடியினரைச் சேர்ந்த பத்து பேர் பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக குகி பழங்குடியின மக்கள் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் ஜிரிபாம் மாவட்டத்தில் 3 பெண்கள் மற்றும் 3 குழந்தைகளை கடத்திச் சென்று அவர்களை சுட்டுக்கொன்று உடல்களை தூக்கியெறிந்தனர்.

இக் கலவரம் தீவிரமடைந்ததையடுத்து, நேற்று செவ்வாய்க்கிழமை காலை பொதுமக்கள் பல இடங்களில் வீதி மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் மணிப்பூரில் அமைதியில்லா நிலை தோன்றியது.

இதன்படி, கடந்த 11 ஆம் திகதி பாதுகாப்பு படையினரால் சுட்டு கொல்லப்பட்ட குகி பழங்குடியினர்கள் பத்து பேரின் உடல்களும் அவர்கள் மக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை குகி பழங்குடியின மக்கள் சவப்பெட்டி ஊர்வலம் நடத்துவதாக அறிவித்ததோடு, அதில் பங்கேற்கும் பாடசாலை மற்றும் கல்லூரி மாணவர்கள் கருப்பு சட்டை அணிந்து பங்கேற்க வேண்டும் எனவும் அழைப்பு விடுத்திருந்தனர்.

தற்போது வரையில் அப் பிரதேசத்தில் பதற்ற நிலை காணப்படுவதால் தொடர்ந்தும் எல்லை பாதுகாப்பு படையினர் மற்றும் மாநில பொலிஸார் ஆகியோர் தீவிரமான கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மகாராஷ்ராவில் இன்று சட்டமன்ற தேர்தல் முடிவுகள் 23 ஆம் திகதி வெளியாகும்

இந்தியாவின் மகாராஷ்ட்ராவில் இன்று புதன்கிழமை சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இத் தேர்தல் முடிவுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

இத் தேர்தலில் மகா விகாஸ் அகாடி கூட்டணி மற்றும் மகா யுதி கூட்டணியும் தீவிரமான வாக்குவேட்டையில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகின்றது.

அதன்படி அரசியல் கட்சிக்கான தேர்தல் பிரசாரம் நேற்று முன்தினம் மாலை 5 மணியுடன் நிறைவுற்றது.

இந்நிலையில் தேர்தல் பிரசாரம் முடிந்து காரில் சென்றுகொண்டிருந்த மகாராஷ்ட்ராவின் முன்னாள் அமைச்சர் அனில் தேஷ்முக் மீது மர்ம நபர்கள் சிலர் கல்வீச்சு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதலில் அனில் தேஷ்முக்கின் தலைப்பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்த நிலையில் அவர் உடனடியாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்று சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முன்னாள் அமைச்சர் மீது நடத்தப்பட்ட இத் தாக்குதல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சிறை பிடிக்கப்பட்ட 7இந்திய மீனவர்கள்; கடலோர காவல் படையினரால் மீட்பு



இந்தியாவின் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த படகில் ஏழு இந்திய மீனவர்கள் நடுக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர்.

குறித்த மீனவர்கள் ஏழு பேரும் எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி பாகிஸ்தான் கடல் பாதுகாப்பு அமைப்பினர் அவர்களை கைது செய்துள்ளனர்.

அத்தோடு நிறுத்தாமல் இந்திய மீனவர்களின் படகுகளையும் நடுக்கடலில் பாகிஸ்தான் படையினர் மூழ்கடித்துவிட்டதாக கூறப்படுகின்றது.

இத் தகவல் இந்திய கடலோர காவல் படைக்கு தெரிய வந்ததையடுத்து, பாகிஸ்தான் கப்பலை விரட்டிச் சென்று அவர்கள் பிடியில் இருந்த ஏழு இந்திய மீனவர்களையும் மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதால் நடுக்கடலில் மோதல் சூழ்நிலை உருவானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் மீட்கப்பட்ட ஏழு இந்திய மீனவர்களுடன் இந்திய கப்பல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஓகா துறைமுகத்துக்கு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டில்லியில் தொடரும் காற்று மாசடைவு; 49 சிகரெட்டுகள் புகைப்பதற்கு சமம்



இந்திய தலைநகர் டில்லியில் காற்று மாசுபாட்டு வீதம் அதிகரித்த நிலையில், 24 மணித்தியாலத்தில் ஒருவர் 49 சிகரெட்டுகள் புகைப்பது எந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துமோ அந்த அளவு பாதிப்பு இக் காற்று மாசுபாட்டினால் இருப்பதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, நேற்று முன்தினம் திங்கட்கிழமை டில்லியில் காற்று மாசுபாட்டின் எதிரொலியாக புதிய கட்டுப்பாடுகளுடன் நிலை 4 அமுலாகியுள்ளது.


இதனால் மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதியம் 12.30 அளவில் டில்லியின் காற்றின் தரக்குறியீடு 978 ஆக பதிவாகியுள்ளது. இந்த பதிவு 49 சிகரெட்டுகள் புகைப்பதற்கு சமம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எல்.ஐ.சி இணையதளத்தில ஹிந்தி - மு.க.ஸ்டாலின் கண்டனம்

இந்திய பொதுத்துறை காப்பீட்டு நிறுவனமான எல்.ஐ.சி. நிறுவனத்தின் இணையதள பக்க முகப்பானது ஆங்கில த்தில் செயல்பட்டு வந்தநிலையில், நேற்று காலை முதல் அதன் இணையத்தளம் முழுக்க ஹிந்தி மொழியில் மட்டுமே இயங்கி வந்தது. மேலும், மொழி தேரிவு செய்யும் பட்டன் தெரியும் ஹிந்தி மொழியில் இருந்ததால், மொழி மாற்றம் செய்வதும் ஹிந்தி தெரியாத மற்ற மொழி பேசும் மக்களுக்கு சவாலானதாக அமைந்தது. மொழி என்பதை குறிக்கும் "பாஷா" என்ற ஒப்ஷனை க்ளிக் செய்து அதில் ஆங்கிலத்தை தெரிவு செய்தால் மட்டுமே ஆங்கில பக்கத்திற்கு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், இதற்கு எதிர்க்கட்சி கள் கடும் கண்டனம் தெரிவித்து வந்தனர். மேலும் எல்.ஐ. சி. இணையத்தளம் ஹிந்தி மொழியில் மாற்றப்பட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், தற்போது மீண்டும் ஆங்கிலத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "NOISE"வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தி தென்கொரியர்களை வதைக்கும் வடகொரியா





வடகொரியா, தென்கொரியாவிற்கு எதிராக **NOISE BOMBING** என்ற ஒரு புதிய ஆயுதத்தை கையிலெடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தென் கொரியாவில் உள்ள இராணுவமயமாக்கப்பட்ட மண்டலத்திற்கு (னுஆணு) அருகில் கிராமத்தில் வசிப்பவர்கள் இலக்கு வைத்து, வட கொரியா ஒலிபெருக்கிகளில் வெடிக்கும் சத்தங்களை ஒலிக்கச்செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது அந்த பகுதியில் உள்ள மக்களுக்கு பெரும் வேதனைகளையும், தொந்தரவுகளையும் அளிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட கொரியாவிலிருந்து 1.6 கிமீ தொலைவில் உள்ள கங்வா தீவின் வடக்குக் கரையில் அமைந்துள்ள தென் கொரியாவின் டாங்சானில் உள்ள கிராமவாசிகள், தாங்கள் "**NOISE BOMBING**"க்கு பலியாகிவிட்டதாகக் கூறுகின்றனர்.

நியூயோர்க் டைம்ஸ் (**NYT**) அறிக்கையின்படி, வட கொரியா அவர்களை உரத்த சத்தங்களுக்கு உட்படுத்துகிறது, சில கிராமவாசிகள் ஓநாய்கள் அலறுவது அல்லது பேய்கள் அலறுவது போன்ற சத்தங்களை கேட்பதாக விபரித்துள்ளது.

"இது எங்களை பைத்தியமாக்குகிறது. இரவில் தூங்க முடியாது," என்று கிராமவாசி ஒருவர் நியூயோர்க் டைம் ஸிடம் குறிப்பிட்டுள்ளார். "இது குண்டுகள் இல்லாத குண்டுவீச்சு," என்று அவர் மேலும் கூறினார்.

டாங்சனின் மக்கள் தொகை வெறும் 354 ஆகும். வட கொரியா ஜுலை முதல் நாள் ஒன்றுக்கு 10 முதல் 24 மணி நேரம் தென் கொரியா உடனான அதன் எல்லையில் ஒலிபெருக்கிகளை ஒலிக்கிறது.

இதனால், வட கொரியாவின் உளவியல் போரில் டாங்சனின் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இசை அல்லது மனித ஒலி இல்லாத இந்த சமீபத்திய இடைவிடாத சத்தங்களை "எரிச்சல்" மற்றும் "அழுத்தம்" என்று கிராமவாசிகள் விவரித்துள்ளனர்.

அவர்கள் ஜன்னல்களை மூடி வைத்திருக்கிறார்கள், சிலர் வடக்கிலிருந்து சத்தம் வராமல் இருக்க ஸ்டைரோஃபோமை நிறுவியுள்ளனர். இந்தச் சத்தம் தங்களுக்கு தூக்கமின்மை மற்றும் தலைவலியைக் கொடுத்துள்ளது.

மேலும் ஆடுகள் மற்றும் கோழிகள் குறைவான முட்டைகளை இடும் கருச்சிதைவுக்கு வழிவகுத்தது என்று கிராமவாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியல்வாதிகள் டாங்சனுக்கு விஜயம் செய்ததுடன், தற்போதைய நிலைமை குறித்தும் ஆய்வு செய்துள்ளனர். ஆனால், வட கொரியாவின் உளவியல் போரை நிறுத்துவதற்கு அவர்கள் ஒரு தீர்வை வழங்கத் தவறிவிட்டனர் என்று கிராமவாசிகள் கூறுகின்றனர்.

வட கொரியாவின் கிம் ஜான் உன் கடந்த சில வருடங்களாக மிகவும் மோசமானவராக மாறிய நிலையில், இரு கொரிய நாடுகளுக்கும் இடையேயானபதற்றம் அதிகரித்துள்ளன.

சமீபத்தில் தென் கொரியாவை அதிகாரப்பூர்வமாக எதிரி நாடாக அறிவித்து அதனுடன் இருந்த அனைத்து எல்லை தொடர்பு சாலைகளைத் துண்டித்து அழித்தது.

மேலும், தென் கொரியாவுக்குள் தங்கள் நாட்டின் குப்பைகள் நிரம்பிய பலூன்களை அனுப்புவது என வடகொரியா தொடர்ந்தும் தொல்லை கொடுத்த வருகின்றது.

எவ்வாறாயினும், தென் கொரியா பதிலளிக்கத் தயாராக இருப்பதாகவும், தமது நாட்டு குடிமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் "வட கொரிய ஆட்சியின் முடிவுக்கு" வழிவகுக்கும் என்றும் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஜோர்ஜியாவில் தேர்தல்

# முடிவுகளுக்கு எதிராக மக்கள் போராட்டம்

ஜோர்ஜியா தலைநகர் திபிலிசியில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது.



அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் கொந்தளிப்பு காரணமாக நாடு முழுவதும் நேற்று போராட்டங்கள் வெடித்தன.

போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் முயன்று வருகின்றனர். இருப்பினும், பொலிஸாரின் உத்தரவை மீறி, அவர்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருவதாக, ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனமான டாஸ் தெரிவித்துள்ளது.

ரொய்ட்டர்ஸ் செய்தியின்படி, போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது கற்களை வீசு தாக்கியுள்ளனர், அவர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இதுவரை, ஜோர்ஜிய அரசாங்கம் நாட்டின் சமீபத்திய நிலைமை குறித்து எந்த அதிகாரப்பூர்வ அறிக்கையையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில்

# பயங்கரவாதிகள், இராணுவம் மோதல் - 17 பேர் பலி

பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் மற்றும் பாதுகாப்புப்படையினரிடையே ஏற்பட்ட மோதலில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.



இந்த சம்பவம் அந்நாட்டின் கைபர் பக்துவா மாகாணத்தின் திரக் மைதான் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படு கிறது. பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் பலூசிஸ்தான் விடுதலை இராணுவம் என்ற கிளர்ச்சிக்குழு மற்றும் பயங்கரவாத அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

இந்த குழுக்கள் பொதுமக்கள், பொலி ஸார் உட்பட பல்வேறு தரப்பினரை இல க்குவைத்து அவ்வப்போது பயங்கர வாத தாக்குதல்களை மேற்கொண்டு வருகின் றன. இந்நிலையில், அந்நாட்டின்கைபர் பக்துவா மாகாணத்தின் திரக் மைதான் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்ப தாக கிடைத்த இரகசிய தகவலுக்கமைய பாதுகாப்புப்படையினர் சோதனை நடவடி க்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து பாது காப்புப்படையினரும் பதிலடி தாக்குதலை மேற்கொண்டனர்.

இரு தரப்பிற்கும் இடையிலான மோதலில் பாதுகாப்புப்படையினர் எட்டுப் பேரும் பயங்கரவாதிகள் ஒன்பது பேரும் உயிரிழந்தனர்.

# தேசிய அவசரநிலை பிரகடனம் செய்ய ஒப்புக்கொண்டார் ட்ரம்ப்



எல்லைப் பாதுகாப்பை உறுதி செய்ய தேசிய அவசரநிலை பிரகடனம் செய்து, ஆவணமற்ற புலம்பெயர்ந்தவர்களை நாடு கடத்த திட்டமிட்டுள்ளதை அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற டொனால்ட் ட்ரம்ப் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் சட்டவிரோத குடியேற்றம் குறித்த கருத்துகள் முக்கிய பிரச்னையாக இருந்தது.

ஜனாதிபதி ஜோ பைடன் ஆட்சியில் சட்டவிரோதமாக அமெரிக்க எல்லைக்குள் நுழைந்தவர்களை நாடு கடத்தி, மெக்ஸிகோவுடனான எல்லையை உறுதிப்படுத்துவேன் என்று ட்ரம்ப் உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில், ட்ரூத் சோசியல் சமூக ஊடகத்தில், டிரம்ப் தலைமையிலான ஆட்சியில் தேசிய அவசரநிலை கொண்டு வரப்பட்டு, இராணுவத்தை பயன்படுத்தி பெருமளவிலான புலம்பெயர்ந்தவர்களை நாடு கடத்தவுள்ளார் என்று ஒருவர் பதிவிட்டிருந்தார்.

அந்த பதிவுக்கு பதிலளித்த ட்ரம்ப், உண்மைதான் என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராக களமிறங்கிய ட்ரம்ப் தற்போது துணை ஜனாதிபதி கமலா ஹறிஸை தோற்கடித்து வெற்றி பெற்றார். எதிர்வரும் ஜனவரி மாதம் அவர் முறைப்படி பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில், ட்ரம்ப் அரசின் எல்லைப் பாதுகாப்புத் துறைக்கு தலைவராக முன்னாள் குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கத்துறையின் இயக்குநர் டாம் ஹோமனை நியமித்துள்ளார்.

இவர், கடந்த ஜுலை மாதம் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில், "ஜோ பைடனால் விடுவிக்கப்பட்ட லட்சக்கணக்கான சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கு ஒரு செய்தி உள்ளது.

நீங்கள் தற்போதே தயார் செய்வது நல்லது" எனத் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவில் சுமார் 1.1 கோடி மக்கள் சட்டவிரோதமாக தங்கியுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. ட்ரம்பின் நாடு கடத்தல் நேரடியாக இரண்டு கோடி குடும்பங்களை பாதிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# "கொல்லப்பட்டவர்களின் இரத்தம் ஒருநாள் உங்களை வேட்டையாடும்"

## நெதன்யாகுவை திட்டிதீர்த்த இஸ்ரேல் எம்.பி

காசாவில் நடந்து வரும் போருக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை பாலஸ்தீன குடியுரிமை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

நெத்தன்யாகு அமைதியின் தொடர் கொலையாளி என்று அய்மன் ஓடே நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது சுட்டிக்காட்டினார். இதன்போது நெதன்யாகு நாடாளுமன்றத்தில் இருந்தார்.

அய்மன் ஓடே இஸ்ரேலிய அரசியல் கட்சியான **Hadash-Tal List**இன் தலைவராக உள்ளார்.

"உங்கள் அமைப்பு காசாவில் 17,385 குழந்தைகளைக் கொன்றுள்ளது. அவர்களில் 825 பேர் ஒரு வயதுக்குட்பட்டவர்கள். 35,055 குழந்தைகள் அனாதைகள் ஆகியுள்ளனர். கொல்லப்பட்டவர்களின் இரத்தம் ஒருநாள் உங்களை வேட்டையாடும்.

நீங்கள் முரட்டுத்தனமாக இருப்பதை நிறுத்த வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீங்கள் ஒரு குற்றவாளி. கடந்த 30 ஆண்டுகளாக நீங்கள் அமைதியின் தொடர் கொலையாளி என்று அய்மன் ஓடே கூறினார்.

நாடாளுமன்ற அமர்விற்கு தலைமை தாங்கிய சபாநாயகர் உரையை நிறுத்த முயற்சித்த போதிலும் அய்மன் தொடர்ந்து நெதன்யாகுவை நோக்கி யவசைபாடினார்.

சபாநாயகர் உடனடியாக பாதுகாப்பு அதிகாரிகளை அழைத்து அய்மனை அந்த இடத்தில் இருந்து வெளியேற்ற



உத்தரவிட்டார். இதனையடுத்து பாதுகாப்புப் படையினரால் அய்மன் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்.

பாதுகாப்பு அதிகாரிகளின் செயலுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குரல் எழுப்பி எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹொங்கொங்கில் 45 ஜனநாயக சார்பு தலைவர்களுக்கு சிறைத்தண்டனை

முன்னாள் ஜனநாயக சார்பு தலைவர்கள் 45 பேருக்கு ஹொங்கொங் நீதிமன்றம், நேற்று

செவ்வாய்க்கிழமை சிறைத்தண்டனை விதித்துள்ளது.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் சட்ட வல்லுநர் பென்னி டாய்க்கு அதிகபட்சமாக பத்தாண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு ஜுன் மாதம் சீனா, கடுமையான தேசிய பாதுகாப்பு சட்டத்தை, ஹொங்கொங்கில் அமுல்படுத்திருந்தது.

இந்த கட்டுப்பாடுகள் கருத்து சுதந்திரத்தை முடக்கும் அதேவேளை நாட்டில் சுயாட்சியை அகற்றும் நடவடிக்கை என்றும் விமர்சனங்கள் வெளியாகின.

அதற்கு முந்தைய ஆண்டு பாரியளவான ஆர்ப்பாட்டங்களை ஜனநாயக ஆர்வலர்கள் மேற்கொண்டனர். இதன்போது வன்முறை சம்பவங்களும் இடம்பெற்றன.

இந்நிலையில் தற்போது விதிக்கப்பட்டுள்ள சிறைத்தண்டனை ஹொங்கொங்கில் அரசியல் எதிர்ப்பை ஒடுக்கும் என்றாலும் மேற்கத்திய நாடுகளின் கண்டனத்தைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வழக்கை அரசியல் உள்நோக்கம் கொண்டது என அமெரிக்கா ஏறகனவே குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் இலங்கை குழாம் அறிவிப்பு

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள இரண்டுப் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கு தனஞ்சய டி சில்வா தலைமையிலான 17 வீரர்கள் கொண்ட இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் அங்கமாக இடம்பெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி கிங்ஸ்மீட் டர்பனிலும்,

இரண்டாவது போட்டி டிசம்பர் ஐந்தாம் திகதி செயின்ட் ஜோகன்னஸ்பர்க்கிலும் இடம்பெறவுள்ளது.

இத்தொடருக்கான பயிற்சிகளுக்கு இலங்கையின் 10 வீரர்கள் தென்னாபிரிக்கா பயணித்துள்ளர். இந்நிலையில் ஏனைய வீரர்கள் 22ஆம் திகதி தென்னாபிரிக்கா நோக்கி பயணிக்கவுள்ளனர்.

அதற்கமைய இத்தொடருக்கான 17 வீரர்களைக் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அணியினை சகலதுறை வீரரான தனஞ்சய டி சில்வா வழிநடாத்துகின்றார்.

மேலும் துடுப்பாட்ட வீரர்களாக பத்தும் நிஷங்க, திமுத் கருணாரத்ன, ஒஷத பெர்ணான்டோ, நிஷான் பீரிஸ் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

மேலும் விக்கெட்காப்புத் துடுப்பாட்ட வீரர்களாக தினேஷ் சந்திமால், குசல் மென்டிஸ், சதீர சமரவிக்ரம ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர். அத்துடன் சகலதுறை வீரர்களாக கமிந்து மெண்டிஸ், அஞ்சலோ மெத்யூஸ் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

சுழல் பந்துவீச்சாளர்களாக பிரபாத் ஜயசூரிய, லசித் எம்புல்தெனிய ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.


வேகப்பந்துவீச்சினை பொறுத்தவரையில், மிலான் ரத்னாயக்க, அஷித பெர்ணான்டோ, விஷ்வ பெர்ணான்டோ மற்றும் லஹிரு குமாரவுடன் கசுன் ராஜித்த ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணி அண்மை காலமாக டெஸ்ட் போட்டிகளில் பிரகாசித்து வரும் நிலையில் தென்னாபரிக்காவை அதன் சொந்த மண்ணில் வைத்து வீழ்த்தும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.




## ஐரோப்பிய நேஷன்ஸ் லீக் தொடர்

# போர்த்துக்கல் உடனான ஆட்டம் சமநிலையில் முடிவு



ஐரோப்பிய தேசிய லீக் கிண்ண கால்பந்து தொடரின் தீர்க்கமாக ஆட்டத்தில் போர்த்துகல் அணிக்கு எதிரான போட்டியை குரோஷியா அணி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலைப்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய கண்டத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடுகளுக்கு இடையிலான கால்பந்து தொடரின் குழு ஏ இல் இடம்பெற்றுள்ள கிறிஸ்டியானோ ரொனால்டோ தலைமையிலான போரத்துக்கல் அணி சமபலமிக்க குரேஷியா இறுதி லீக் ஆட்டத்தில் சந்தித்தது.

இந்தப் போட்டி கோல்ஜுஃட் அரங்கில் இடம்பெற்றிருந்தது.

விறுவிறுப்புக்குப் பஞ்சமின்றி ஆரம்பித்த போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் விட்டுக் கொடுப்பின்றி கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர்.

இதனால் ஆட்டத்தின் 33வது நிமிடத்தில் விடின்ஹா கொடுத்த கோலுக்கான பந்துப் பறிமாற்றத்தை பெற்ற ஜாவொ பெலிக்ஸ் கோல் அடிக்க முதல் பாதி ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் முன்னிலைப்பெற்றது.

எனினும், இரண்டாம் பாதி ஆட்டத்தில் குரேஷிய வீரர்கள் வேகம் காட்டினர். இதனால் ஆட்டத்தின் 65வது நிமிடத்தில் ஜோஸ்கோ க்வார்டியோல் கோல் அடிக்க போட்டி 1-1 என சமனிலையடைந்தது.

பின்னர் இருந்த மேலதிக நிமிடங்களில் இரு அணி வீரர்களும் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டிய போதிலும் இறுதி வரையில் கோல் அடிக்க முடியவில்லை.

இதனால் ஆட்டத்தின் முழு நேரமும் நிறைவுக்கு வர விறுவிறுப்பான ஆட்டம் 1-1 என்ற கோல்கள் அடிப்படையில் சமநிலையில் நிறுவுற்றது.

இந்த போட்டி சமநிலையில் முடிந்த போதிலும், போர்த்துல் அணி குழு ஏ இல் 14 புள்ளிடகளுடன் முதலிடம் பிடித்துள்ளதுடன், காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

குரோஷியா அணி எட்டுப் புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் இரண்டாம் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# டி20 போட்டிகளில் அதிக ரன் குவிப்பு ரோஹித், சூர்யகுமார் இல்லை.. சாம்சனுக்கு முதலிடம்

நடப்பு ஆண்டில் சர்வதேச டி20 போட்டி களில் இந்திய அணி சார்பில் அதிக ஓட்டங்களை குவித்த வீரர்கள் வரிசையில் நட்சத்திர வீரர் சஞ்சு சாம்சன் முதலிடம் பிடித்துள்ளார்.

அத்துடன், இந்த ஆண்டு சர்வதேச டி20 போட்டிகளில் அதிக சிக்ஸர்களை அடித்த வீரர்களின் வரிசையிலும் சாம்சன் முதலிடம் பிடித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த தென்னாப்பிரிக்கா அணிக்கு எதிரான டி20 தொடரில் சாம்சன் சதங்களை அடித்திருந்ததுடன் இந்த ஆண்டில் மொத்தமாக மூன்று சதங்களை அடித்து சாதனைப் படைத்துள் ளார்.

இதன்மூலம் டி20 துடுப்பாட்ட வரிசையில் மூன்றாம் இடத்தில் இருக்கும் சூர்யகுமார் யாதவ் மற்றும் ஹிட்மேன் ரோஹித் சர்மாவை பின் தள்ளி சஞ்சு சாம்சன் முதலிடம் பிடித்துள்ளார்.

சஞ்சுசாம்சன் இந்த ஆண்டு விளை யாடிய 12 போட்டிகளில் 43.60 சராசரியில் 436 ஓட்டங் களை குவித்துள்ளார். அவரின் ஸ்ட்ரைக் ரேட் 180.16. ஆகும். இந்த ஆண்டில் மட்டும் அவர் மூன்று சதங்களை அடித்துள்ளார்.

எவ்வாறாயினும், அவர்விளையாடிய 12 போட்டிகளில் ஐந்து முறை ஓட்டங்களை எதுவும் பெறாமல் ஆட்டமிழந்திருந்தமையும் சுட்டிக்காட்டதக்கது.

இந்திய டி20 அணியின் தலைவரான சூர்யகுமார் யாதவ் 17 போட்டிகளில் 26.81 என்ற சராசரியில் 429 ஓட்டங்களை குவித்துள்ளார். அவரின் ஸ்ட்ரைக் ரேட் 151.59 என்பதுடன் நான்கு அரை சதங்களையும் அடித்தார். டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றாலும், ஹிட்மேன் ரோஹித் சர்மா பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளார். இந்திய அணிக்காக ரோஹித் 11 போட்டிகளில் 42 சராசரியுடன் 378 ஓட்டங்களை குவித்துள்ளார். அவரின் ஸ்ட்ரைக் ரேட் 160.16 ஆகும்.

மத்திய வரிசையில் இந்தியாவை பலப்படுத்தும் சகலதுறை வீரர் ஹர்திக் பாண்டியா இந்தப் பட்டியலில் நான்காவது இடம் பிடித்துள்ளார். அவர் 14 போட்டிகளில் 352 ஓட்டங்களை குவித்துள்ளார்.

தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய திலக் வர்மா, பட்டியலில் ஐந்தாவது இடத்தில் உள்ளார். ஐந்து போட்டிகளில் 102 சராசரியுடன் 306 ஓட்டங்களை குவித்துள்ளார்.

இந்தியா சார்பில் சர்வதேச டி20 போட்டிகளில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர்களில் சஞ்சு சாம்சன் முதலிடத்தில் உள்ளார். உலகக் கிண்ண தொடரில் விளையாடாத போதிலும் அவர் 31 சிக்சர்களை அடித்துடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுக்கு எதிரான டி20 தொடரை கைப்பற்றியது ஆஸி

சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவது இறுதியுமான டி20 போட்டியில் மார்க்ஸ் ஸ்டொய்னிஸின் அதிரடி அரைச்சதத்தின் உதவியுடன் 52 பந்துகள் மீதமிருக்க ஏழு



விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரை 3-0 என கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட டி20 ஆகிய தொடர் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்றிருந்தது.

இதில் முதலில் நிறைவுக்கு வந்த ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி 2-1 என கைப்பற்றியிருந்தது. இந்நிலையில் மூன்று போட்டிகள் கொண்ட டி20 தொடரின் முதல் இரு போட்டிகளிலும் வெற்றி கொண்ட அவுஸ்திரேலிய அணி 2-0 என தொடரை தன் வசப்படுத்தியிருந்தது.

மூன்றாவது இறுதியுமான போட்டி ஹார்போட்டில் இடம்பெற்றது. போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானம் செய்தது.

அதன்படி களம் நுழைந்த பாகிஸ்தான் அணி 18.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 117 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து 118 என்ற இலகுவான வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த அவுஸ்திரேலிய அணி மூன்று விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று 52 பந்துகள் மீதமிருக்க ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன் தொடரை 3-0 என கைப்பற்றியது.

# சீனா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி ஆரம்பமாகியது

பல முன்னணி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்ளும் சீனா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டி ஷென்ஜென் நகரில் நேற்று ஆரம்பமாகியது. இதில் ஒலிம்பிக் சாம்பியன் விக்டர் ஆக்சல்சென் (டென்மார்க்), உலக சம்பியன் குன்லாவுத் விதித்சரண் (தாய்லாந்து), முதல் நிலை வீராங்கனையும், ஒலிம்பிக் சாம்பியனுமான அன் சே யங் (தென்கொரியா), முன்னாள் உலக சம்பியன்கள் பி.வி.சிந்து (இந்தியா), அகானே யமாகுச்சி (ஜப்பான்) உள்ளிட்ட முன்னணி வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இதன்படி, எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறும் இந்த போட்டியில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் முன்னாள் முதல் நிலை இணையான இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி-சிராக் ஷெட்டி களம் இறங்குகிறது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 நவம்பர் 20ம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.